873

8)1

10 FEB 1941

MADRAS

உ

சிவமயம்.

திருமுதுகுன்றம்

பெரிய நாயகி யம்மன் பிள்ளைத்தமிழ்.

இது

திருக்கைலாய பரம்பரைத் திருத்துறையூர் வீரசைவாதீனம்

ஸ்ரீ சோக்கலிங்க சிவப்பிரகாச பண்டார சந்நிதி

அவர்கள் அருளிச்செய்தது

ஷ ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசிவப்பிரகாச பண்டார சந்நிதி அவர்களின்

சிவானந்த பரிபூர்ண விழாவன்று

அவர்களின் நினைவுக்குறியாக

ஷ ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சிவப்பிரகாச

பண்டார சந்நிதி அவர்களால்

இரண்டாம் பதிப்பாக

வெளியிடப்பட்டது.

1941

ஜனோபகார அச்சுக்கூடம்,

துறையூர்.

உ

சிவமயம்.

திருமுதுகுன்றம்

பெரிய நாயகி யம்மன் பிள்ளைத்தமிழ்.

இது

திருக்கைலாய பரம்பரைத் திருத்துறையூர் வீரசைவாதீனம்

ஸ்ரீ சொக்கலிங்க சிவப்பிரகாச பண்டார சந்நிதி

அவர்கள் அருளிச்செய்தது

894.8111

ஷை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசிவப்பிரகாச பண்டார சந்நிதி அவர்களின்

சிவானந்த பரிபூர்ண விழாவன்று

அவர்களின் நினைவுக்குறியாக

ஷை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சிவப்பிரகாச

பண்டார சந்நிதி அவர்களால்

இரண்டாம் பதிப்பாக

வெளியிடப்பட்டது.

1941

ஜனோபகார அச்சுக்கூடம்,

துறையூர்.

துறையூர், பெரியகடைத்தெரு,
ஜனோபகார அச்சுக்கூட நிலையத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்—பதிப்பு,
பிரதிகள் 1000

இரண்டாம் பதிப்பின்

முன்னுரை.

பிள்ளைத்தமிழ் என்பது, தமிழ் மொழியிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. அது, ஆண்பாற் பிள்ளைக்கவி, பெண்பாற் பிள்ளைக்கவி என இருவகைப்படும். ஆண்பாற் பிள்ளைக்கவி, காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்து உறுப்புக்களையுடையது. ஒவ்வொரு உறுப்பும் பத்துப்பத்து விருத்தப்பாவான் முடிவதாகும். பெண்பாற் பிள்ளைக்கவி, ஆண்பாற்பிள்ளைக்கவி உறுப்புக்களுள் சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் மூன்றனையும் விலக்கி, ஏனைய ஏழு உறுப்புக்களுடன் அம்மனை, ஊசல், கழங்கு என்னும் மூன்று உறுப்புக்களையும் கூட்டி, உறுப்புக்குப் பத்துப்பத்து விருத்தப்பாவான் முடிவதாகும். இப் பெண்பாற் பிள்ளைக்கவியில் கழங்கை விலக்கி, நீராடலைக்கூட்டிப் பத்து உறுப்புக்களாகக் கொள்வதுமுண்டு. அவற்றுள், இந்நூலாசிரியர், கழங்கை விலக்கி நீராடலைக்கூட்டிப் பத்து உறுப்புக்களாகக் கொண்டு பாடியுள்ளார்.

இப்பெரியநாயகியம்மன் பிள்ளைத்தமிழ், மிக்க சொல்நயமும் பொருள் நயமும் செறிந்து விளங்குகின்றது. நூலாசிரியரின் அநுபவ வுண்மைகள் அமைந்து மிளிர்கின்றன. சித்தாந்த வுண்மைகள் சிறந்து பொலிகின்றன. படிக்கப் படிக்கப் பக்திச்சுவை ததும்பி வழிந்து படிப்பவருள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றது.

இத்தகைய சிறந்த நூலை, துறையூர் வீரசைவாதீனம் 21-வது பட்டம் ஸ்ரீ சிதம்பர சிவப்பிரகாச பண்டார சந்நிதி அவர்கள், பூவை, திரு. கலியாணசுந்தர முதலியார் அவர்களைக்கொண்டு பரிசீலனை செய்து முதற்பதிப்பாக விரோதி ஆண்டில் வெளியிட்டுள்ளார்கள். பின்வருங் காரணத்தால், திடீரென்று ஒரு வாரத்துள் இரண்டாம் பதிப்பாக இந் நூலையே வெளியிட நேர்ந்தது. அதனால், இந்நூலை, தனை, சீர்பிரித்து, பிழைபாடின்றி, உரையும் எழுதி வெளியிட இம்முறையும் இயலவில்லை. உலகம் பொறுக்குமாக. வெளிவராத நூல்களுள் ஒன்றை வெளி

யிடலாமெனின் அவைகளும் ஏட்டுச்சுவடிகளிலிருப்பதால் விரைவில் வெளியிட இயலாதாயிற்று. நம், கருணையே உருவாய் வந்த ஸ்ரீ சுப்பிரமணிய சிவப்பிரகாச பண்டார சந்நிதி அவர்கள், என்னிடம் 'இரண்டு நூல்களாயினும் இவ்விழாவிற்குள் வெளியிடுங்கள்' என்று பணித்தார்கள். எவ்வளவு முயன்றும் வெளியிட்ட நூலையே வெளியிட நேர்ந்ததுபற்றி வருந்துகின்றேன்.

ஷை சந்நிதானம், அப்பெருமுயற்சி தளராமல் சுமார் பத்தாண்டாக அச்சிட்டு வெளிவராதிருக்கும் திருவாவடுதுறை 9-வது பட்டம், ஸ்ரீ அம்பலவாணதேசிகர் அருளிய "ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள் நெஞ்சுவிடு தூது" என்னும் நூலையும், இவ்வாதீனத்தில் நாளிது வரை வெளிவராது ஏட்டுச்சுவடிகளிலிருந்து இடர்ப்பாடுறும் பல அரியபெரிய நூல்களையும் காலப்பிற்பாடின்றி கூடியவிரைவில் அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் மொழியையும், சைவசமயத்தையும் வளர்த்து அழியாப்புகழை நிலைநாட்டுவார்கள் என்று எண்ணுகின்றேன். அவ்வாறே அம்பலக்கூத்தரும் அருள்புரிவாராக.

இப்பெரிய நாயகியம்மன் பிள்ளைத்தமிழை இயற்றிய ஆசிரியர், தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் தாலூகா தில்லையம்பதியிலுள்ள திருப்பாட்டன் தெருவில் வீரசைவ மரபில் பிறந்து சோக்கலிங்கம் என்னும் பிள்ளைத் திருநாமம் பெற்றவர்கள். இவர்கள், இளமையிலேயே துறவுபூண்டு, திருமுதுகுன்றம் வந்து, ஆங்கு குமாரதேவர் பரம்பரையில் வந்த முத்தையசுவாமிகளிடத்துத் தீக்ஷைபெற்று, அவர்களிடமே தமிழ் மொழியிலுள்ள இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுறக்கற்றுத் தேர்ந்தனர். தாம் கற்ற கல்விக்கேற்ப நல்லறிவும் நல்லொழுக்கமும் உடையராய் சிவபக்தியில் சிறந்து விளங்கினார்கள். அதனால், அவர்கள் திருக்கைலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருத்துறையூர் வீரசைவாதீனம் 20-வது பட்டம்பெற்று ஸ்ரீ சோக்கலிங்க சிவப்பிரகாச பண்டார சந்நிதிகளாய் நீண்டநாளிருந்து தமிழ் மொழியையும், சைவசமயத்தையும் வளர்த்து வந்திருக்கின்றனர்.

அக்காலத்தேதான், இத்திருமுதுகுன்றம் பெரியநாயகியம்மன் பிள்ளைத்தமிழைப் பாடியிருக்கின்றனர். இதுவன்றி, குமாரதேவ

ரபிடேகமாலை, திரிபதார்த்தவுண்மை, உபதேச விளக்கம் முதலிய நூல்களையும் இயற்றி, குமாரதேவர் செய்துள்ள பதினாறு சாத்திரங்களுள் ஒன்றான சுத்தசாதகம் என்னும் நூலுக்கும் உரையெழுதி வைத்துள்ளார்கள். இப்பிள்ளைத்தமிழ்ப் பாயிரச் செய்யுளுள் சகாப்தம் ஆயிரத்து எண்ணூற்றுப் பதினேழென்றில் இப்பிள்ளைத்தமிழ் இயற்றியது என்று காணப்படுவதால் இந்நூல் கி. பி. 1889-ல் பாடியதாகும்.

இந்த ஸ்ரீ சோக்கலிங்க சிவப்பிரகாச பண்டாரசந்நிதி அவர்கள் ஒருபோது தம் திருத்துறையூரினின்றும் நீங்கி, தங்கள் மடத்தைச் சார்ந்த சென்னையிலுள்ள மயிலாப்பூர் குமாரதேவர் மடத்தில் எழுந்தருளியிருந்தார்கள். அங்கே சோழவளநாட்டிலுள்ள திரிசிரபுரத்தில் அந்தணர் மரபில் பிறந்து சிதம்பரம் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்ற ஓரிளைஞர் வந்து எதிர்ப்பட்டனர். நம் ஸ்ரீ சோக்கலிங்க சிவப்பிரகாச பண்டாரசந்நிதி அவர்கள் அவ்வந்தணர் சிறுவரின் அறிவின் திறனையறிந்தார்கள். அவரைத்திருத்துறையூருக்கு உடனழைத்து வந்தார்கள். அவர்தம் மனங்கோணாதவாறு வைத்திருந்து, கல்வியறிவூட்டி, வீரசைவாகம விதிப்படி, சிவலிங்கதாரணமாதிய தீக்ஷைகள் செய்திட்டு, தமக்குப்பின் அவர்களையே திருத்துறையூர் வீரசைவாதீனத்தில் 21-வது பண்டார சந்நிதிகளாய்ப் பட்டம் சூட்டிவைத்து தாம் சிவானுபவ இன்பம் எய்தினார்கள்.

அதுமுதல், ஸ்ரீ சிதம்பர சிவப்பிரகாச பண்டாரசந்நிதி அவர்கள், திருத்துறையூர் பெரிய மடத்திலும், திருமுதுகுன்றம் குமாரதேவர் மடத்திலுமாக இருந்துகொண்டு, தங்கள் ஆதீனத்தைச்சேர்ந்த 64 மடாலயங்களையும் பரிபாலனம் செய்துவந்தார்கள். இவர்கள் பல மடாலயங்களைப் புதுப்பித்துக் கட்டிவைத்தார்கள். பரந்த நிலங்களையும், மிக்க பொருள்களையும் மடாலயத்திற்குத் திரட்டி வைத்தார்கள். தம் வாழ்நாளிறுதியில், தங்கள் மடாலயத்து அடியவர்களுள் ஒருவராக விருந்த, சுப்பிரமணியம் என்னும் இளமைப்பெயரெய்தியவர்கள் நிறைந்த கல்வி, சிறந்த அறிவு, பரந்த நோக்கம், விரிந்த அன்பு, மிகுந்த, ஆற்றல், தகுந்த அடக்கம் ஆதிய நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர்களாய் இருந்தமைகண்டு, அவர்களுக்கே, வீரசைவாகம விதிப்படி தீக்ஷை முதலாயின செய்து, மகாபிஷேகமும் பட்டமும்

சூட்டிவைத்து, விக்கிரம ஆண்டு தைத்திங்கள் **22**ம்-நாள் [4–2–41ல்] திருமுதுகுன்றம் குமாரதேவர் மடத்திலேயே சிவானந்த பரிபூரணம் எய்தினர்கள். 14–2–41ல் அவர்களுக்கு, ஆங்கே, ஸ்ரீ சுப்பிரமணிய பண்டார சந்நிதி அவர்கள், சிவானந்த பரிபூரண விழா நடைபெறுங் காலத்து, அவர்களின் நினைவுக்குறியாக விரைவில் இப்பெரியநாயகியம்மன் பிள்ளைத்தமிழை அச்சிட்டு வெளிப்படுத்தி, யாவருக்கும் இலவசமாக வழங்கித்தமிழ்மொழியை வளர்க்கத்தொடங்கியது போற்றத்தக்கதேயாம்.

இவ் அருளே உருவாயெழுந்த ஸ்ரீ சுப்பிரமணிய சிவப்பிரகாச பண்டார சந்நிதி அவர்கள், எவ்வகை நலமும் இனிது எய்தி, நீண்ட ஆயுளுடன் நெடுநாளிருந்து, தமிழ்மொழியையும், தமிழ்ப்புலவர்களையும் சைவசமயத்தையும் ஆதரித்து வளர்த்து இனிதுவாழுமாறு பொன்னம்பலவாணர் இன்னருள் புரிவாராக.

ஷை ஆதீன வித்துவான்,

ஆ. சுந்தரராஜ உடையார்

திருமுதுகுன்றம்.

திருக்கைலாய பரம்பரை, மெய்கண்ட சந்தானம், திருவண்ணாமலை
வீரசிம்மாதன கர்த்தர்,
திருத்துறையூர், ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்.

(VIDE)

I

Gazetteer of Trichinopoly District Vol. 1. Page. 295

"A small math (monastery) in the village controls 64 smaller maths in this and the South Arcot Districts. It has small endowments, but no control over any temples. It has two resident monks. [Turaiyur is also known as the centre of a still considerable enmity between the 'right hand' and 'left hand' factions referred to on page 92"]

II

Gazetteer of South Arcot District Vol. I. Page 400.

"In the town, on the road to Pennadam, is Komara Devar's math, which has some local fame. Komara Devar is said to have been a kind of the Canarese country who came here on a pilgrimage and was fed by the goddess herself as he lay exhausted from the long journey under a pipal tree in front of the temple. The math was built by one of his admirers and contains frescoes depicting the above and other scenes in his life."

(True copy.)

By, K. Kandasamy Pillai,
Agent,
SRI KUMARA DEVAR MUTT.
VRIDDHACHALAM.

உ

சிவமயம்.

பாயிரம்.

அத்துவித வானந்த நித்யபரி பூரண
வகண்டசின் மயவ டிவமா
யமர்விருத் தாம்பிகைத் திருவடிக் கவளடி
யடைந்துமுது கிரிய தனில்வாழ்
வுற்றிடு குமாரதே வக்குரு பரன்பொனடி
யொண்பணி விடைச்செய் தொண்ட
னேதுமிப் பிள்ளைத் தமிழ்ச்சாலி வாகனத்
துறுமா யிரத்தெண் ணூற்றூ
டொத்தபதி னொன்றன சருவதா ரிப்பெய
ருறும்வருட மானி மதியி
லோங்குமிரு பத்தைந்து தேதிசனி வாரமுட
னுறுமமர பக்க மதனிற்
சொற்றம்வைந் தானநட் சத்திரந் திதியே
துனுந்த்ரயோ தசிமு தலவாச்
சூழுமிச் சுபதினஞ் சொக்கலிங் கத்தவன்
சூட்டினன் பா மாலையே.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருமுதுகுன்றம்.

பெரியநாயகியம்மை பிள்ளைத்தமிழ்.

1-வது காப்புப்பருவம்

விநாயகர் துதி.

பொன்பூத்த மணிநிறப் பூவைவண் ணக்குரிசில்
போந்துவந் தித்தி ரந்தே
பொருவிறிரு முன்செய்வி கடக்கூத் தினைக்கண்டு
புகல்விலா விறந கைத்தே
தென்பூத்த திருவுளமி ரங்கியெழில் சக்கரந்
தீர்த்தர்க் களித்துல கெலாஞ்
செயவிகட சக்கரவி நாயகனெ னப்பெயர்கொள்
செம்மலிரு தாடு திப்பாம்
மின்பூத்த சடைமௌலி முதுகிரிப் பரமனிரு
விழிகள்களி தூங்க வெழிலாம்
விருந்திட் டிடப்புற மிருந்திட்ட மதுதந்த
விமலிஜெக தாம்பி கையுமிற்
கின்பூத்து வாலாம்பி கைப்பிரம ராம்பிகை
யெழிற்சுந்த ராம்பி கையெனக்
கிருதா ளளித்தபழ மலைவிருத் தாம்பிகை
யியற்றமிழ் தழைக்க வென்றே. (1)

திருமால்.

எர்மேவு பாற்கடலி னலைடயி னுகணையி
லென்றுமறி துயில்கொண் டுணர்ந்
தெண்ணிலண் டத்தசர வசரவுயி ரத்தனையு
மின்புற வளித்து மருளா

ஞர்மேவு பக்தகோ டிகள்புரித வத்தருமை
நாடியெக் காலு நசியா
நற்பரம பதநா டளிக்குமொரு கடவுளடி
நாண்மலர் தனைத்து திப்பாஞ்
சீர்மேவு வன்னிநீ ழற்குடிகொள் பழமலைச்
செல்வர்க்கு ளின்ப வெள்ளந்
தேக்கிவழி தரவவர் புறத்தொடு புறம்படரு
திவ்யபச் சைக்கொடி யைச்செந்
தார்மேவு கூந்தன்மட மானைப் பசுந்தேனை
தளர்நடை யனப் பேட்டினைச்
சாயன்மயி லைக்குயிலை விருத்தநா யகியைப்பொற்
றையலை யளிக்க வென்றே. (2)

பழமலைநாதர்.

நறைமிகு கொன்றை கோங்கு நதிமதி தும்பை தூர்வை
நகுதலை யென்று மோங்க - வளர்சடைக் கேற்றினர்
நலமிக னங்கன்மேனி யவுணர்பு ரங்களூழி
யடலைகள் கொண்டு தீட்டு - புண்டரக் கீற்றினர்
குறைவி றவக்குமார னயர்வறப் பந்தர்நீழற்
குளிர்புனன் மொண்டு சாலின் - மொண்டுகை நீட்டினர்
குலவர சன்னமேறு கடவுள கந்தைமாளச்
சிரநட கழ்ந்து காரி - செங்கரத்தேற்றினர்
மறைமுத லங்கமாறும் வலதவ ரையமாற
வடதரு தங்கி ஞானச் - சுடரகத் தேற்றினர்
மயிலையில் சம்பைமேவு முனிகொடு கும்பமேவு
மடமயி லென்பி னூடு - முயிர்வரத் தோற்றின
ரறைகட லன்றுமேவிக் கடைபொழு திந்திராதி
முறைசெவி கொண்டு காரி - கண்டமட் டாற்றின
ரருள்விப சித்துதாளி னணிநிழல் பெற்றுவாழ
வருள்பழ மலைப்ப ரேச - னடியிணைப் போற்றுதும்
நிறைசுக மென்றுதேவ ரமுதையி கந்துவீசு
நிகரில்சு வைச்சொல் பேசு - மஞ்சிறைப் பூவையை

நிதமுமுள் ளன்பினோடு பரவுமெய் யன்பர்காண
நிசதரி சனஞ்செய் மேவி - நின்றமெய்க் காட்சியைச்
சிறையளி கிண்டிநாளு மிடறுதி றந்துபாடிச்
செறிநற வுண்டுவாழ்சு - கந்தநற் றாட்பொதி
செவியவ லங்கல்சூடு செயல்செய்ய ரம்பைமாதர்
சலசமி ருந்த மாதர் - நின்றுகைக் கூய்த்தொழ
மறைதுதி கொண்டதாளின் விரைமலர் கொண்டுதூவிச்
சுரர்தின முஞ்செய் பூசை - கொண்டவற் கேற்றிடு
மலிசுக சந்தநாடு புகவருள் பொக்கர்வாழு
மதிரச செஞ்சொல் பேசு - மஞ்சுகப் பேட்டினைக்
கறையிருள் தின்றுவீசு கதிர்மணி தொங்கன்மேவு
கமழ்நறு சந்த மோடு - குங்குமச் சேற்றனை
கதிர்முலை கொண்டுலாவு மயிலைவ ளங்குலாவு
கவின்முது குன்றின் மேவு - கன்னியைக் காக்கவே. (3)

ஆழத்துப்பிள்ளையார்.

ஒருகோ டிரண்டுசெவி முக்கணல் வாயைங்கை
யோடாறு மதமு டையதோ
ரும்பன்மா தவர்கள்தம துளமெனன கூடத்தி
னுறுபரம வைராக் யமாப்
பெருமைபெறு தறியிற் பிறங்கன்பு தொடர்பூட்டிப்
பிரிவற விருத்தி நாளும்
பேசரு முயிர்ப்போத கவளமிட வுண்டவர்கள்
பிரியகு றிப்பி னொழுகி
யருமையொடு விளையாடு மாழத்துப் பிள்ளையிணை
யடிமலர் தனைத்து திப்பா
மம்பொன்மணி மாடமீ தார்த்தகொடி வெண்மதியி
னகடுகீண் டொழுகு மமுத
வருவிபாய் செந்நெற் படப்பைகள் வளஞ்செறியு
மணிமுது கிரிக்க ணமரு
மாய்மயிற் பெடையைவிர்த் தாம்பிகை யெனுஞ்சேயை
யன்பொடு புரக்க வென்றே. (4)

சுப்பிரமணியர்.

கள்ளா ரிதழித் தொடைப்பெருமான்
கரகங் கணம்போய்ச் சடையொளிப்பக்
கரிய திருமாற் கரச்சங்கிற்
கட்டு மவன்பாய்ச் சுருட்டொளிப்ப
விள்ள வடிப்பைஞ் சிறைத்தோகை
விரிக்கு மஞ்ஞைப் பரிநடத்தி
விழைகுஞ் சரியை மணம்புரிந்த
வேலோன் றிருத்தாண் மிகத்துதிப்பாம்
பொள்ளா மணிமுத் தலைகொழிக்கும்
புனித நதிசூழ் கிடந்தொளிரும்
பொருவி லயன்மான் முதலமரர்
போந்து பார்த்துள் ளதிசயிக்குந்
தெள்ளா ரமுதை வன்னிநிழற்
சேர்ந்து முளைத்த பவளவண்ணத்
திருமா முதுகுன் றிடைப்படர்ந்து
திகழ்பைங் கொடியைப் புரந்திடவே. (5)

நான்முகன்.

அலையே றிடும்பாற் கடற்குட நிகர்த்தவளை
யதுவய றுளைந்தீன்றமுத்
தாமெனவு மதனிலெழு நிறைமதியு மெனவொளிரு
மஞ்சிறைச் செஞ்சூட்டனம்
விலையேறு குரகதங் கடவிவெள் ளைக்கமலம்
வீற்றுறு மனப்பேட்டினை
விழைவொடு மணந்தரிபொன் னுந்திமலர் வந்துலகை
விதிகட வுளைத்துதிப்பாம்
கலையேறு மதியமுது குப்பவும் படவராக்
காரிவா யிடைகக்கவுங்
கையேறு மானலறச் சிற்சபையி னடனமிடு
கடவுண்மகி ழுந்துணைவியைச்

சிலையேறு வலியவென் புன்முடியில் பூனதச்
செஞ்சிலம் படிசூட்டிளஞ்
சித்ரமயி லைக்குயிலை விர்த்தகிரி வளரிளஞ்
சேயைப் புறங்காக்கவே.

சத்தமாதர்கள்.

நனைமலர் திசைமுக னுத்தோ றடுத்தவள்
நசிகரி தோலைக் கபாயென் றுடுத்தவள்
மதவவு ணக்குலம் வியப் படுத்தவள்
மலிகட னீரழ லாகக் கடுத்தவள்
கனபுவி தனையொரு கோடிட் டெடுத்தவள்
கைலையை யிறையொடு மேகத் தடுத்தவ
ளெரிபுரை வேல்கொடு காவற் கடுத்தவ
ளெனுமிவ ரெழுவர்தந் தாளைப் பழிச்சுதும்
கனைகுர லுமிழனல் போலச் சினத்தெழு
கதுவிய வவுணக் குலாதிக்க தாருகன்
றனைநிகர் சூர்முதன் மாயக்ர வஞ்சமுந்
தலைகெடத் திசைதிசை யோடச் செலுத்துவேற்
றனையனைத் தோளிட் டுலாவிக் களித்திடு
தனிமுது கிரிவளர் தாயைப் புரக்கவே. (7)

காளி.

பைபரவி னுலகுமண் ணுலகுவிண் ணுலகுமொரு
பகையுரு மற்காக்கவும்
பார்முழுது நாவினை விரித்துச்செஞ் சோரிதுளி
பார்விழா மற்சுவைத்துச்
சையமென வசுரனை மடித்தலத் தேற்றிமுத்
தலைவேற் கரங்கொண்டவன்
றடமார் பிடந்துகோ ளரியேறு கைத்திவரு
தக்கசூ ரரிகாக்கவே
துய்யநீர் பூத்தமுள் ளரைபா சிடைக்கமல
தூவித ழுவிழ்ந்துபாயுந்

துதைநறவு நிறைவட்ட மலர்மனைக் குடிகொண்ட
தோகைமட வாரிருவருஞ்
செய்யவல் விடவிழிய தாகச் செயுந்தவச்
செவ்விநோக் கிக்கடைக் கண்
செய்தபழ மலையிடம் படருமர கதவணச்
செழியபூம் பைங்கொடியையே (8)

இந்திரன்.

சீர்மேவு கற்பகத் தருநீழல் வைகிச்
சிறந்தவீ ரிருகோட்டுமுச்
செவ்விய கடாம்பொழியும் வெண்கரிக டாவியிரு
டின்னுமின் விடுபுயலினை
யேர்மேவு திசைதிசை துரத்திவாள் கொண்டுமலை
யிறகறுத் தெவ்வுலகையு
மேவிதரு மத்தெய்வ மதுகொடு புரக்குமோ
ரிந்திர னடித்துதிப்பாம்
நார்மேவு நதிமதி துரந்திரவி லோர்பெண்மனை
நாடித்தூ தாய்ச்சென்றது
நாடிமெய்த் தொண்டியற் றிடுமியற் பகைமனையை
நண்ணியது மதிலிலங்கைத்
தார்மேவு புயவிரா வணன்மனைவி யார்க்கின்பு
தந்ததுமு னோர்ந்துநாளுந்
தனையன்பு பூட்டிச்சிந் தைச்சிறைசெய் முதுகிரித்
தையலை யளிக்க வென்றே. (9)

முப்பத்துமூவர்.

கார்மல விருளென துளமனை யகலக்
கதிர்விடு சிற்சுடராக்
கதிர்விடு மிரசித வள்ளத் தமுது
கரங்கொடு சென்றரசின்
சீர்நிழல் வதியுங் குமரற் கூட்டிச்
சின்மய வொளிகாட்டுஞ்

சிற்பனா யைப்பழ மலைவள ரிமயச்
செல்வியை யனுதினமு
மேர்கதிர் விடுபன் னிருசூ ரியர்திசை
யெண்மரு மிசைபோய
வெண்வை ரவரும ருத்துவ ரெழுவரு
மெண்மர் வசுக்களொடுந்
தார்மிலை ருத்திரர் பதினொரு வருமொளிர்
சந்திர னிந்திரனுந்
தகுமுப் பதுமுக் கோடிபல் தேவர்க
டகவொடு காத்திடவே.

காப்புப்பருவம் முற்றும்.

௨-வது. செங்கீரைப்பருவம்.

மதிதவழு மிமையத் திருத்தேவி யார்முன்ன
மாற்றுந் தவப்பெற் றியான்
மங்கலத் திருவிடை வருந்தா துயிர்த்துமண
மஞ்சள்பொற் பொடிதி மிர்த்தே
துதிமலர் கரங்கொடு கணைக்காற் கிடத்திவெண்
சுரிமுகச் சங்கின் வாசந்
துன்னுங் குளிர்ந்தநன் னீராட்டி விழிசெவி
துணைத்தாள்க ணீவி வாய்கூ
யதிவேக முடனுச்சி நீரூதி மோந்துமெல்
லாடைகொடு மெய்யொற் றிப்பி
னம்பொன்முலை மார்போ டணைத்துநீ றிட்டுநுத
லணிநிலப் பொட்டு மிட்டுத்
திதிபெறக் கொங்கைபமு தூட்டவள ருங்குழவி
செங்கீரை யாடி யருளே
திகழ்பழம லைப்பதி செழிக்கவரு மென்னம்மை
செங்கீரை யாடி யருளே. (1)

நந்தாத செல்வச் சிலம்பரையன் மனையாட்டி
நாண்முகை தனத்தி னேர்கை
நாடிவரு டவுமோர் தனம்பிடித் தமுதுண்டு
நழுவுபான் மடிந னைப்ப
வந்தாவ லொடுசிற்றில் விளையாட நயமொழியின்
வாங்கிப்பொற் புறத்தா ருவால்
வணபாவை யிடையேற்றி மாதவிப் பந்தரிடை
மல்கும்பி ணுக்குழ வொடுஞ்
செந்தார் பசுஞ்சிறைக் கிள்ளையை மணஞ்செய்து
தீங்கனி விருந்திட் டுப்பொற்
சீர்ச்சிவிகை யேற்றிமணம் வருசெயற் றற்பெற்ற
சேற்கண்ணி நோக்க வவடன்
சிந்தாகு லந்தீர வந்தாடல் புரிசெல்வி
செங்கீரை யாடி யருளே
திகழ்பழ மலைப்பதி செழிக்கவரு மென்னம்மை
செங்கீரை யாடி யருளே. (2)

காருலாம் புரிசைசூழ் மாடமலி கூடலின்
கட்பொலிபொன் மாலை வாசக்
கங்கைபுனல் கொண்டாட்டிப் பிறைநுதற் றிருநீற்றுக்
காப்பிட்டுத் திலத மிட்டுக்
கூருலாம் வேல்விழிக் கஞ்சனந் தீட்டியிரு
கொங்கைபா னிறைய வூட்டிக்
கோதறுநல் லாடையணை மீதிட்டுச் சீராட்டு
கோதைகட் களிதூங் கநற்
சீருலா மிருகர நிலத்தூன்றி யோர்தாட்
சிலம்பலற மேனீட் டியோர்
செப்பத கணைக்காற் கவிழ்த்தூன்றி யுடனிமிரச்
சிரமே லசைந்தா டிடுஞ்
சேருலா மண்டசர வசரசிற் றுதரவனை
செங்கீரை யாடி யருளே
திகழ்பழம லைப்பதி செழிக்கவரு மென்னம்மை
செங்கீரை யாடி யருளே. (3)

மருவிற் றிடுங்கமல மலர்வழிந் தொழுகுதேன்
வாரியொடு முத்த நதியின்
மல்கும்வெள் ளப்புனல் மடைக்கால் கிழித்தொழுக
வளர்செந்நெல் கதலி கமுகந்
தருவிற் றிடும்பல வளஞ்செறி விருத்தகிரி
தங்குபூங் காவின் விண்ணோர்
தஞ்சிறு பிணாக்களொடு சிறுவீடு கட்டிசிறு
சாதஞ் சமைத்து மலர்மேற்
றிருவிற் றிடுங்கடல் பிறந்தமதிக் கடவுளைச்
சிறியவெரு விட்டி றைஞ்சிச்
செங்கைமலர் கூய்ப்பரவி யமுதுண் டுளங்தேக்கிச்
சிறுகைதத் தாங்கி கொட்டிச்
செருவிக்கி மகிழ்வோடு விளையாடு மொருகுழவி
செங்கீரை யாடி யருளே
திகழ்பழ மலைப்பதி செழிக்கவரு மென்னம்மை
செங்கீரை யாடி யருளே. (4)

முள்ளருத் தண்கொடிப் பாசடைச் செவ்விதழ்கொள்
முளரிமா ளிகையு மதுர
முதிருநவ ரசமொழுகு மறைகிடந் தனுதின
மொலித்திடு செநாவுந் துளிக்
கள்ளருத் தருநீழ லுறையுஞ் சுராதிபர்கள்
கைதொழுது வேட்ட வடையுங்
கைலைவரை யுஞ்சில் லெனச்சிமைய மொய்த்திடு
கவின்கொளிமை யத்தே விபார்க்
குள்ளரு வுவகைபெற வாயமுடன் விளையாடி
யோங்குபொன் மாளி கைவளர்ந்
தோங்குமர கதவல்லி யபிராம வல்லியெனு
ளத்கட முளைத்து மலருஞ்
சிள்ளருக் கமலபத சிவகாம வல்லிநீ
செங்கீரை யாடி யருளே
திகழ்பழ மலைப்பதி செழிக்கவரு மென்னம்மை
செங்கீரை யாடி யருளே. (5)

வேறு

முகககம லத்துகள் கயல்க ளிரண்டு முரிப்பொ டசைந்தாட
 முடிபுனை சூழிய நடுவொளி ரன்னம் முன்பு கவிழ்ந்தாட
மகபதி தனுநிக ரிருபுரு வச்சிலை மகிழ்வி னிமிர்ந்தாட
 மணியொளி விடுசுட் டிப்பிறை நுதலிடை மன்னி யசைந்தாடச்
சுகமுமு தச்செவ் வாய்பன் முத்தொளி தோன்றி விரிந்தாடத்
 துங்கக் கரமலர் மொய்த்திடு வண்டுகள் துள்ளி யசைந்தாட
வகவக டிடைவைத் தண்ட முயிர்த்தவ ளாடுக செங்கீரை
 யருள்பழ மலையர னிடமுறை வித்தகி யாடுக செங்கீரை. (6)

தண்டை சதங்கை சிலம்பு புலம்பித் ததைந்து விரிந்தாடத்
 தருநிக ருங்கை வளைவைத் தாற்றிய தண்மணி யொளியாடக்
கெண்டைக ணேடிச் செவிபொற் குமிழிடு கிளர்முத் தொளியாட
 கிஞ்சுக வாயித ழெழுநறை புனலொடு கெழுபுன் னகையாடக்
கொண்டைமென் மாலை யவிழ்ந்துந ரந்தக் குஞ்சி விரிந்தாடக்
 கோதறு மரகத மேனி ததும்புங் கொழுவிய வெயிலாட
வண்டையி னின்றர ளுடல் களித்தவ ளாடுக செங்கீரை.
 யருள்பழ மலையர னிடமுறை வித்தகி யாடுக செங்கீரை. (7)

பக்க மணைத்துகில் வெண்ணிட் டுதையாப் பதமலர் கன்றுமே
 பருகுறு தேறற் சுவைப்பெரு விரலிற் படுமண் ணெண்ணுமே
சக்கிடு கோழைக் குரல்மிக விம்மிக் கம்மிப் போகாமே
 கவின்முத் தெனநுண் குளிமுத் திருவிழி கட்கடை சிந்தாமே
தொக்கப சுங்கதிர் மரகத மேனித் துகள்மண் ணணையாமே
 துன்னிடு பவர்கர வணைமிசை தாவித் துள்ளிப் போகாமே
யக்கர வப்பணி யற்கிரு கண்மணி யாடுக செங்கீரை
 யருள்பழ மலையர னிடமுறை வித்தகி யாடுக செங்கீரை. (8)

வே று.

அடல்கெழு திசைவரை பொடிபட் டெழுதுக ளசுரர்கள் விழியேற
 வதிர்குரன் மைடங் கடவிடு நமனுள மஞ்சிப் பயமேற
படவர வுடனெளி வுறமன் மகளுறு பாரச் சுமைபாறப்
 படிறவு ணக்குல மகளிர்வ யிற்றிடை பற்றித் தீயேற

மிடலறு மமரர்க டுயர்தீர் தீரொனு மெல்லுரை வாயேற
மிளிர்கொக் கிருபிள வாகச் சுடர்விடு மின்வேல் கையேறத்
திடயயில் கடவுமொர் மதலைபை யுதவினள் செங்கோ செங்கீரை
திகழ்பழ மலையிடை வளருமோ ரிளமயில் செங்கோ செங்கீரை. (9)

நெஞ்சுரு கிக்கசி வுற்றவர் கட்கெதிர் நின்று டும்பாவாய்
நேமிக் கைக்கர கக்கைக் கடவுளர் நின்று தொழுந்தோகாய்
தஞ்சிறு குமரனு ளஞ்செறி யிருளறத் தங்கு மெழிற்பூவாய்
தக்க மறைச்சிர சிற்பொலி சிற்பத சங்கரி யெம்பாவாய்
கஞ்சுக மைஞ்சு மொழிந்தவர் கண்டிடு கண்ணே வெம்பாசக்
கடன்முழு காதெனை மடன்மலர் தாணிழ லிந்தா வென்றீயுஞ்
செஞ்சுக வாய்மொழி யின்சுவை யருள்பவள் செங்கோ செங்கீரை
திகழ்பழ மலையிடை வளருமொ ரிளமயில் செங்கோ செங்கீரை

செங்கீரைப்பருவம் முற்றும்.

---

3. வது தாலப்பருவம்.

கன்னற் சிலைவேள் வசந்தனொடு
கடவுஞ் சிறுகா லெழுந்தசையக்
கனலின் சிகைபோற் றளிர்த்திடுதீங்
கன்னி மாவி னிழற்றுயில்செய்
பின்னற் கயவாய்த் திகிரியெனப்
பிறங்கு மருப்புப் புனிற்றெருமை
பிரியாப் பசும்பற் கறிக்கறியாப்
பேதை யிளங்கன் றுளத்துன்னிப்
பொன்னற் குடமா முலைநின்று
பொழிபா லருவி யுவட்டெறிந்து
புகுத வளர்செங் நெற்கழனிப்
பூந்தா மரையிற் கண்வளரு
மன்னஞ் சிலம்பும் விருத்தகிரிக்
கரசே தாலோ தாலேலோ
வண்ட மனைத்து மளித்திடும்பெண்
ணமுதே தாலோ தாலேலோ. (1)

எற்கு மணிமே கலைநுசுப்பி
லிசைந்து விரிந்து மருங்கலைப்ப
வெழிற்கை சேப்பச் சிற்றிலிழைத்
தேற்கு நாளிற் குடிபுகுந்து
சேர்த்து முத்துச் சூட்டடுப்பிற்
செவ்வூன் கழிந்த வலம்புரியிற்
செந்தே னுலைப்பெய் தரவீன்ற
செழுமா மணியி னனல்கொளுவித்
தூர்க்குஞ் சுவைமாத் தனையரிசி
சொரிந்து சிறுசோ றினிதாக்கித்
தொந்தோ மெனவங் கெதிர்நடித்துத்
துடிவிட் டோச்சிக் கைவிரித்தங்
கார்க்குந் துணைவற் கினிதூட்டு
மரசே தாலோ தாலேலோ
வண்ட மனைத்து மளித்திடும்பெண்
ணமுதே தாலோ தாலேலோ. (2)

குரும்பை நாண வரும்புமிளங்
கொங்கை குலுங்கக் கடைசியர்கள்
குறுந்தாண் மள்ளர்க் கொழுநரொடுங்
கூடித் தால மதுவருந்திக்
கரும்பு கறித்து முடைவாயோர்
கையாற் கதுவு மீயோச்சிக்
காறள் ளாடி யசைந்தசைந்து
கவின்முத் தாற்றி னீர்பாய்ச்சித்
திரும்ப வுழுதங் களறுசெய்து
செந்நெல் விதைக ளூற்றுவிடுஞ்
செய்ய வயல்சூ ழுதன்புடையிற்
றெங்குங் கமுகுங் கதலிகள்பூ
வரும்பும் வளஞ்சேர் விருத்தகிரிக்
கரசே தாலோ தாலேலோ
வண்ட முழுது மளித்திடும்பெண்
ணமுதே தாலோ தாலேலோ. (3)

செறிந்து நீண்டு கறுத்துநெய்த்துச்
சேரு மணப்பூ மகரந்தந்
திமிர்ந்து நறிய நெய்தோய்ந்து
திரியு மறுகாற் குழன்மடவார்
பிறிந்து குடையு நறுமஞ்சட்
பெருநீர் பாய்ந்து செழித்தசெந்நெற்
பிறங்கும் பருதிக் கயர்வொழியப்
பெருங்கா லோச்சும் பூந்தருத்தே
னெறிந்து மணிமுத் தலைகொழிக்கு
மிணையின் முத்தா நதிவளஞ்சே
ரெழிலார் நகரி லனுதினமு
மேற்றித் துதிக்கு மென்சிறுமை
யறிந்து புரக்கும் விருத்தகிரிக்
கரசே தாலோ தாலேலோ
வண்ட மனைத்து மளித்திடும்பெண்
ணமுதே தாலோ தாலேலோ. (4)

ஊறும் பாற்குள் ளிரண்டுசுமந்
தொசியு நறும்பூங் கொம்பனையா
ரோதி முராலுஞ் சுரும்புகள்பூ
வுதிர்க்குந் தாது விண்ணதியைச்
சேறு செய்யும் பொதும்பர்தவழ்
திங்கட் கலையை முசுக்கலைபாய்
செறிகம் பலைக்கங் கொதுங்கிவயற்
செந்நெற் சூட்டின் மேய்ந்துதிரிந்
தேறு முகிற்போத் தெருமையொடு
மிழுத்துப் பிணைய விட்டடிக்கு
மெறுழ்கார் மள்ள ரிடிக்குரல்கேட்
டிரிந்தோட் டெடுக்க வயன்மலர்த்தே
னூறு தடுக்கும் விருத்தகிரிக்
கரசே தாலோ தாலேலோ
வண்ட முழுது மளித்திடும்பெண்
ணமுதே தாலோ தாலேலோ. (5)

வே று.

எழில்வெள் ளிக்கிரி யமர்பவ ளக்கிரி யிடைபடர் பைங்கொடியே
யெவ்வுயி ருஞ்செய் தவக்குறை யறவரு மிமய மடப்பிடியே
செழிமல ரடிநினை பவர்மல விருடெறு சிற்சுடர் தினமணியே
செம்மல ரயனரி கைம்மலர் குவிகழல் செல்விபொள் ளாமணியே
வழிசுவை யமுதுகு மதியே நவரசம் வதிமது ரக்கனியே
வண்டமி ழோர்புகழ் கொண்ட பதாம்புய வஞ்சி யிளங்கொடியே
தழியுள மகிழ்செயு முதுகிரி மயிலே தாலோ தாலேலோ
தருணத் துதவுநல் லமுதக் கடலே தாலோ தாலேலோ. (6)

உடல நடுக்குற் றுருகுவ ரிதையத் தொளிரும் விளக்கொளியே
யொப்பில் பரஞ்சுட ருக்கித முதவுறு முத்தம நற்றுணையே
சுடர்விடு மணிகள் சுமந்து துவண்டசை சுகுணப் பொற்கொடியே
துய்ய ரகத்துமென் னைய ரகத்துந் துனுமமு தச்சுவையே
வடவரை மகரத் துவச நிறுத்திய வள்ளற் கொருசேயே
வசைசொற் பழகிய வெனைநற் றமிழ்சொல வைத்த வருட்டாயே
தடமுலை தழுவக் குழைமுது கிரிவளர் தாலோ தாலேலோ
தருணத் துதவுறு மமுதக் கடலே தாலோ தாலேலோ. (7)

அண்டர்க் கதிபதி வெண்கரி பிளிறிட வகநா ணதின்மூழ்க
வம்புய லேறி யடர்த்தெதிர் சென்றே யமரிற் றமரினெடு
மண்டெட் டிசையிற் றலைவரு மனிகமு மலையிற் சிறகரியும்
வச்ரப் படைகொடு பிறகிட் டுடைவது கண்டு முகங்குளிராச்
சண்டற் புரையவு ணக்குல மொழியத் தடவட வரைநெரியத்
தகுவியர் வயறெரி யக்கடல் சுவறத் தனிவேற் படைதிரியாத்
தண்டத் தமர்புரி தனையனை யருள்பவள் தாலோ தாலேலோ
தருணத் துதவுறு மமுதக் கடலே தாலோ தாலேலோ. (8)

வே று.

பாவும் பல்லுயிர் பாபக் கடனீர் தோயாமே
பற்றறு முத்தர்கள் மீண்டு கருக்குழி சேராமே
தாவுந் தருமக் கொடியுல கிற்றலை சாயாமே
தருமறை தந்திர விதிவழி யும்பாழ் போகாமே

சேவுற் றிடுபவ ரடிநினை செந்நெறி சோராமே
செம்மணி நீறு திகழ்ந்துல கெங்கணு மாருமே
மேவுந் திருமுது கிரிமயில் தாலோ தாலேலோ
மெய்த்தவர் நத்திடு முத்தமி தாலோ தாலேலோ. (9)

வே று.

தடவர வத்தணை துயில்செய் முகுந்தன் றங்காய் தாலேலோ
தசைக ளுதிர்த்தவ னசைகெட வரனுடற் பங்காய் தாலேலோ
நடமிடு தற்பர னுளநளி னத்தமர் நங்காய் தாலேலோ
நாரத னுக்கெழிற் பெண்ணுரு தந்திடு நாயகி தாலேலோ
படவர வைச்சிறு விரன்மோ திரமாய்ப் பற்றினள் தாலேலோ
பைங்கர கமலத் தொளிர்திரி சூலப் படையாய் தாலேலோ
மடன்மலர் மகளிரை விழியென முகமலர் வைத்தவள் தாலேலோ
மதிதவழ் முதுகிரி வளர்சஞ் சிவியே தாலோ தாலேலோ. (10)

தாலப்பருவம் முற்றும்.

4.வது சப்பாணிப்பருவம்.

தேனூற் றரும்புவாய் விண்டலர் பொதும்பரிற்
செழியசெந் தளிர்கள்கொய் துஞ்
செஞ்சிறு பிணுக்களொடு மட்காற் கலம்பெய்து
சிற்றில்விளை யாட்ட யர்ந்தும்
வானூற்று புயன்மகிழ் மயிற்குஞ் சனக்குஞ்சு
வகைவகயை கிளிவ ளர்த்தும்
வண்பூவை யொடுபேசி வாய்முத்த மிட்டுமொளி
வளர்பைங் கழங்காடியுங்
கானூற்று தொடிவிரவு காந்தண்மலர் கைக்கொண்டு
கண்பொத்தி விளையாடியும்
கந்தமலி நெட்டித ழுவிழ்க்கும்வெண் டாமரைக்
கலைமகளி னிருகைமாறித்
தானேற்று பம்பைசூற் றிடுமலர்க் கைகூப்பிச்
சப்பாணி கொட்டி யருளே
தண்முத்த நதிசூழ்ந்த முதுகிரிப் பெண்ணரசி
சப்பாணி கொட்டி யருளே. (1)

ஐந்தொழிலு மைஞ்சத்தி யாற்பிரமன் முதலான
வைவர்க்கு மெண்ணளவைகாட்
டைவிரல் படைத்தகை குறிப்பிட் டதைத்தெளிய
வாற்றியறி வித்திடுங்கை
பைந்தழைய வரசடியிற் குமரனுக் கதிமதுர
பால்வாய் நெரித்தூட்டுகை
பாமனைக் கச்சியின் மூலைச்சுவ டுறத்தழுவு
பங்கயச் செங்கையவராற்
றந்தநெற் சிற்றளவை யிருநாழி யாலறந்
தனையெணான் கும்புரிகைமேற்
றமியனையு நோக்கிநீ யஞ்சலென் றிடுகையொளி
தங்குமணி கங்கணக்கை
சந்தமக ரந்தநறை கொட்டுமலர் கொய்கையாற்
சப்பாணி கொட்டியருளே
தண்முத்த நதிசூழ்ந்த முதுகிரிப் பெண்ணரசி
சப்பாணி கொட்டியருளே. (2)

சேலையலை யேற்றுமொரு வேலையிடை யாலிலையிற்
செங்கண்வளர் புயன்மார்பனைச்
சேர்திருவு நான்மறைக ளோவிடு மறைக்கிழவர்
செந்நா மணிப்பீடம்வாழ்
வேலையலை செய்விழித் திருவாணி யிருபுறமு
மேவியைம் பான்முடித்து
விழுமலர் புனைந்துநுதல் கத்தூரி சவ்வாது
விரவிநற் றிலதமிட்டுக்
காலைமலர் குவளையிரு கட்கஞ்ச னந்தீட்டிக்
கதிர்செய்மணி மாலைபலவுங்
கவினுடல் பெறச்சாத்தி மணவறையி லழன்முனைக்
கரகநீர் விடுதந்தையார்
சாலவாழ்த் தித்தரவெம் மையர்தொட் டிடுகையாற்
சப்பாணி கொட்டியருளே
தண்முத்த நதிசூழ்ந்த முதுகிரிப் பெண்ணரசி
சப்பாணி கொட்டியருளே. (3)

போராட்டு மசுரருடல் தசைமென்று நிணமூளை
போழ்ந்தெடுத் துத்தின்றுகைப்
புட்டுநக் கிக்கக்கி விக்கிப்புண் ணீர்மாந்திப்
புளிவாய் குதட்டும் வடிவேற்
பாராட்டு குழவியைக் கணக்காற் குளிப்பாட்டிப்
பசிதமிட் டுச்சிமோந்து
பாற்கொங்கை சங்கிட்டுக் குவிவாய் நெரித்தூட்டிப்
பைம்பொற் குறங்கினேற்றிப்
பேராட்டி காலசைத் துப்பாட் டிசைத்திட்டுப்
பிரியமொடு கண்வளர்த்துப்
பெய்துதுகி லணிமணித் தொட்டிலிடை யிட்டுப்
பிணித்தபொன் வடமசைத்துத்
தாராட்டு கதலிகமு கதுநாட்டி யாட்டுங்கை
சப்பாணி கொட்டியருளே
தண்முத்த நதிசூழ்ந்த முதுகிரிப் பெண்ணரசி
சப்பாணி கொட்டியருளே. (4)

கங்கோடு பொருமலை கடற்றுனை சுற்றுபுவி
காவல்ர்கண் முன்றி றார்க்குங்
கப்பணப் பொற்குப்பை யோடுந் திசைத்தலைவர்
கதிர்மணி முடித்தாமமுந்
தங்கோதை யோடவைக டலைமயங் கிடவொற்றைச்
சக்கர முருட்டி யுலவுந்
தகைப்பரிதி வெயில்விடும ணுலகுபொன் னுலகரவு
தங்குலக மெங்குமஞ்ச
வெங்கோப மறவாணை யாழிகட வித்திக்கு
விசையஞ்செய் தெங்கோனக
வெள்ளிவே தண்டத்து மேறித் துஜங்கட்டி
வெம்முரச மார்த்து வெற்றிச்
சங்கோல மிடவெழிற் செங்கோல் பிடித்தகை
சப்பாணி கொட்டியருளே
தண்முத்த நதிசூழ்ந்த முதுகிரிப் பெண்ணரசி
சப்பாணி கொட்டியருளே. (5)

வேறு.

எம்பெரு மானடி வைத்த கருத்த ரிடற்கடன் மூழ்காமே
யெச்சம யருமுள மச்ச முறீஇத்தம தெழினு லோதாமே
செம்பொரு ணிலையிது வெனுமுப நிடதச் செவ்வழி கோணமே
செங்கா நின் றுரை செய்திடு சுத்தச் செந்நூல் தோலாமே
சம்புசொ லின்படி பம்பனு பவநிலை சங்கைகள் சேராமே
சகசம துறவுப தேசித் தடிமுடி சாற்றிக் குமரன்வாய்க்
கும்பவ ளப்பா லூட்டிடு கைக்கொடு கொட்டுக சப்பாணி
கோதறு முதுகிரி யாதி பராபரை கொட்டுக சப்பாணி. (6)

அரவக் கிண்கிணி யணிதாள் தத்தடி யாற்றிச் சேவாமே
யங்குமு தச்சிறு வாய்பால் சங்கிட் டணியிதழ் கன்ருமே
பிரமப் புரபொய் கைக்கரை யயில்பால் வாய்வீ ழுகாமே
பெருமா னென்பணி புயமலை பாமலர் பெய்தது சோராமே
தரமறு பதிதறும் வீடடை வித்தது தரையினி வாராமே
தண்டமிழ் நாடு தழைந்தது சைவஞ் சமணிருள் சாராமே
குரவணி காழிக் குழவியை யருள்பவள் கொட்டுக சப்பாணி
கோதறு முதுகிரி யாதி பராபரை கொட்டுக சப்பாணி. (7)

வாருந் தண்பனி நீரும் பொதிமலை வளர்சங் கிலிபரவை
வந்தணை சந்தச் சேறு திமிர்ந்திடு வன்றெண் டன்னெருகா
லூருங் கிழமிவர் பேருங் கிழமெழி லுறுநதி யுங்கிழமே
லொள்ளிய மனைவி பெருங்கிழ மென்றிகழ் வுறுசொற் புவிமாறச்
சாருஞ் * சோண கிரித்தவ னுறுபசி தணியத் தகுமன்னஞ்
சட்சுவை கறியொடு வாலாம் பிகையாய்த் தண்மலர்ப் பதமோவக்
கோரும் படிவந் தூட்டிய கரமலர் கொட்டுக சப்பாணி
கோமுது கிரியமர் வாமிம ணோன்மணி கொட்டுக சப்பாணி. (8)

மறைசடல் தெளிய வடித்தெடு தந்திர வழிபதி கத்தோடே
மகிழ்சிவ ஞானமெ னமுது குழைத்திடு வள்ள முலைப்பாலாற்
கறையறு கழுமல மதலை வயிற்றை நிரப்பிய கைத்தாயே
கரிமுக னெழிலறு முகனை வளர்த்திடு கனசெவி லித்தாயே

---

* சோணகிரித்தவனென்பது குருநமசிவாயரை.

யறைகுழ லிசைமலர் பிரசத் திரதத் தனை யமிழ் தத்தோடே
யளவிய முதிர்கனி பொழிநறை மிக்கபெ ருக்கேபோற்
குறையற விதழ்தே றற்சொரி குயிலே கொட்டுக சப்பாணி
கோமுது கிரியமர் வாமிம னேன்மணி கொட்டுக சப்பாணி

வேறு.

வெயில்விடு கதிர்மணி பாரப் பூண்முலை
சிறுமியர் குடைபுன லார்பொற் றாமரை
விழுமடு வோடிப் பாய்தர மிக்க பெருக்கேபோற்
சுரிமுக வரிவளை சூலுற் றேபெறு
மணியொளி யலகினி லாவொப் பாய்கவின்
மணமிகு கைரவ வூறற் றேனொடு மண்டும்வ யற்கோடி
செயின்மடை நடுவிடை பீறிக் கீறுமுள்
செறிமலர் கைதைத் தூறினை வேரொடு
சிதைய முறித்தலை வீசிம தன்கையில் செழியநி றைத்தேறி
வளையுரு ளொன் றுறு தேரை யிழுத்தெழு
பரியுடல் வியர்வறக் கால்மிக் கோச்சிடு
வளமுள சோலைசெவ் வேழ மடித்து முறுக்காலைப்
பயிறெளி சாறு மிடாவிற் பாய்தரத்
தெறிதுளி மணிமுத் தாறுற் றேசெலப்
படுமலை யோதைக் கேயு ணடுக்க மெடுத்தோடி
யருகுறு தடமிள மேதி போய்விழ
வதில்வள ருறுசெவ்வ ராளெட் டேடவி
ழுழுகிய கதலிகள் சாய வுயர்ந்த மடற்றெங்கின்
வியன்மிட றொடிபடக் காய்மிக் கார்குலை
யுதிர்தரச் சாடிப் போய்விண் ணார்நதி
குடையும் வளஞ்செறி முதுகிரி யமர்மயில் கொட்டுக சப்பாணி
குறையறி வுடையவென் மீதிற் சீரருள்
கொழிமல ரிணைவிழி மாறற் றேயுறக்
குலவல ரடிநிழல் வீடிட் டாள்பவள் கொட்டுக சப்பாணி.

சப்பாணிப்பருவ முற்றும்.

---

5. வது முத்தப்பருவம்.

உருகி யுருகிக் கண்களினீ
　　ரொழுகித் துதிநாத் தழும்பேறு
மொப்பில் தவத்த ருளக்கோயி
　　லுறையு ஞான மணிவிளக்கே
குருகி லுருவாய் முடிதுருவுங்
　　கொச்சைப் பிரம னகந்தணியக்
குப்புற் றுருளக் குலவரைகள்
　　கோடா கோடிக் கொடுமுடியாய்ப்
பெருகி வளரெம் பெருமாற்குப்
　　பிரியப் பெரிய நாயகியாய்ப்
பெண்ணிற் கரசா யண்டமெலாம்
　　பெற்று வளர்த்துப் பெருகிடவிண்
டருவிற் பொலியும் பெருங்கருணைத்
　　தாயே முத்தந் தருகவே
தக்கார் புகழும் விருத்தகிரித்
　　தாயே முத்தந் தருகவே. (1)

கஞ்சம் பொருவு நின்னடியிற்
　　கண்மூன் றுடைய வெம்பெருமான்
கலவி யூடல் தணித்திடுவான்
　　கவிழ்ந்து வணங்கச் சிரம்பொலியும்
பிஞ்சு மதியி னமுதகலை
　　பெருகி யோட விதழிநறை
பெருகிப் பாய விரிந்தசடை
　　பிறழா தசைத்த படவரவ
நஞ்சு பிலிற்ற மானலற
　　நகுவெண் டலையு முடனலற
நன்னீர் மகளங் கோட்டெடுக்க
　　நாடி நகைக்குந் திருவாயாற்

றஞ்சத் துணைவற் கருள்புரியுந்
தாயே முத்தந் தருகவே
தக்கார் புகழும் விருத்தகிரித்
தாயே முத்தந் தருகவே. (2)

அண்ட ரயன்மாற் கரியவெம்மா
னவுணர்க் கிறையா மிலங்கையர்கோ
னவிரு நவரத் தின்மிழைத்த
வரிய மணிமா ளிகையதனைக்
கொண்ட காவ லாணையையுட்
குறியா தடைந்தங் கவன்மனைவி
கொங்கை புணர்ந்து மலரணையிற்
கொஞ்சு மமையத் தவன்வரவு
கண்ட பொழுதே மதலையுருக்
காட்டி மலர்வாய் குவித்தழுது
கண்ணீர் பாயக் குறம்பாடிக்
கையேற் றெடுத்து மார்பணைத்துத்
தண்ட ரளமுத் திடும்வாயாற்
றாயே முத்தந் தருகவே
தக்கார் புகழும் விருத்தகிரித்
தாயே முத்தந் தருகவே (3)

ஐந்து பொறியும் புலன்வழியி
லாமை யுறுப்பைந் தடக்குதல்போ
லடையா தடக்கி நடுநிலையி
லடுக்கு நினைப்பு மறப்பதும்போய்ச்
சிந்தை யொருங்கிச் சமனை
செய்ய தராசி னுனியதுபோற்
செவ்வே யிருந்துந் தனையருளைத்
தேர்ந்து பரையைத் திளைத்துமே
லெந்தை யடிக்கீ ழிரண்டறநல்
லின்பப் பூவை யொடுஞ்சுகித்தங்
கிறுமாந் திருக்கும் பெருந்தவத்தோ
ரேற்றித் துதித்துக் கேட்டவரந்

தந்து புரக்கு மெழில்வாலைத்
தாயே முத்தந் தருகவே
தக்கார் புகழும் விருத்தகிரித்
தாயே முத்தந் தருகவே. (4)

வானப் புனலுள் வாங்குமிப்பி
வரும்வெள் ளாணி முத்துநின்சேய்
வண்ணச் சிவிகை யார்த்தழகு
மாண்ட கரும்பின் முத்தமரன்
மோன நுதற்கட் டழற்படிந்து
முறிந்த கயலின் முத்தமெழின்
மூக்கிற் றூங்கித் தேய்ந்தபுயன்
முத்திந் திரன்கா லிழிவடைந்த
கூன விளவெண் சங்கீன்ற
கொழுமுத் தெழில்வே யீன்றமுத்துங்
கொண்ட னிறத்தோன் வாயெச்சிற்
குழுமி நாறு மெழின் முத்தித்
தான மளிக்கு நின்கனிவாய்
தாயே முத்தந் தருகவே
தக்கார் புகழும் விருத்தகிரித்
தாயே முத்தந் தருகவே. (5)

வேறு.

இணையடியின் மணியிட் டிழைத்திடு சிலம்புமுறை
யிடுசிறு குரற்கிண்கிணி
யிற்றிடுமி திற்றிடுமி தென்றிரங் கிடுமே
கலைக்கிசைய பட்டுவீக்கும்
பணைமுலை சுமந்தவிடை யொட்யாண முங்கரப்
பங்கயத் தேந்துகிளியும்
பைந்தரள மாலைமார் மேலுத்த ரீயமிடர்
பகல்செய்மாங் கிலியநாணு

மிணையின்மதி முகமுமம் மதிநடு வரும்புகுறு
விளநிலாப் புன்முறுவலு
மெவ்வுயிர்க் குங்கருணை பொழிவிழியு மரகத
வெழிற்கோல நோக்கியெம்மான்
பணையெண் புயங்கொண் டணைத்துமுத் தாடுசெம்
பவளவாய் முத்தமருளே
பழமலையின் வளர்வன்னி நிழலமர் பரன்பன்னி
பவளவாய் முத்தமருளே. (6)

ஐயமுறு துடியிடை துவண்டிட வுறச்சூழு
மறுகாற் சுரும்பர்பாடு
மஞ்சிலோ திப்பனி மலைக்கரையன் மனைவிகச்
சார்த்தமுலை மலையிலாலுங்
துய்யவெண் டரளவொளி மதிநிலாக் கற்றையிற்
றுளும்பமுத கலையைமானத்
தோமறு சகோரமுண வாக்கருதி யுற்றவண்
டுண்டமிட் டள்ளியுணல்போற்
கைவலி நிலாக்கதிற் சிதறிடுந் திவலையினொர்
கதிர்முத்த நாசிநாலக்
கயல்விழி கடைப்பிறழ வருவியென வொழுகுபாற்
கதிர்முலை விரற்கைவருடப்
பையவொர் தனம்பிடித் துண்டசிறு குழவிசெம்
பவளவாய் முத்தமருளே
பழமலையின் வளர்வன்னி நிழலமர் பரன்பன்னி
பவளவாய் முத்தமருளே. (7)

வேறு.

அக்க மனற்பொறி கக்க கடக்கரி
யட்ட தளைப்புனையா
வச்சுரர் மெச்சிட மட்டினு நற்கணை
யைப்புற னிட்டெழிலார்

செக்கர் சடைக்கர வைக்கொடு கட்டி
யிறுக்கி முடித்தணிபாச்
செங்கட் பணிநா ணேற்றிபொன் மலையைத்
திண்டனு வாய்ப்பிடியாத்
தக்க புவித்தொழின் மிக்கிர தத்தை
நடத்தித் தருக்கினெடுங்
தழலெழ முப்புர நகைபி னெரித்திடு
தழைசினை வன்னிநிழன்
முக்கணர் பக்க முளைத்த பசுங்கொடி
முத்தந் தந்தருளே
முத்த நதிக்கரை யிற்பொலி சிற்பரை
முத்தந் தந்தருளே. (8)

வே று.

சிமய வெற்பன் மனையி யற்றுந் தவப லப்பெண் பிடியனுய்
செறியி சைப்பண் புறவு ரைக்குஞ் சிலசொல் கற்குஞ் சிறுகிளாய்
இமைய வர்க்கின் மனைவி யிற்சந் ததியொ ழிக்கு மிறைவியே
யிறைவர் மெச்சுங் கவுரியற்சந் ததிவ ளர்க்கு மெழிலியே
சமைவு டைத்தண் டரணி முற்றுந் தனிபு ரக்குந் தலைவியே
சதும றைக்கிண் கிணிய ரற்றுர் பதநி னைக்குஞ் சதுர்க
டமைபு ரக்குங் கருணை நற்பெண் டருக முத்தந் தருகவே
தடமு துக்குன் றிடைபொ லிப்பெண் டருக முத்தந் தருகவே. (9)

வே று

துன்றிருள் சென்று கிழித்திடு மதிகதிர்
சூழ்கடல் வளைபுவியிற்
றுரிசற வடிமைசெய் வழிவழி யடியர்பொ
ருட்டலர் வட்டணையிற்
சென்றுழல் வண்டிசை கொண்ட குழற்றிரு
வைச்செழி வெண்கமலச்
செல்வியை யுயிர்க டொறும்பொலி ஞானத்
திருவையும் வலமிடமா

யொன்று நுதற்புறம் வைத்திடு முக்கனி
யொப்பில் பராபரையே
யொண்டவ மில்லரு மண்டிசெய் தொண்டுள
முறுசிந் தாமணியே
முன்றவர் தேடி யளித்திடு பொற்கொடி
முத்த மளித்தருளே
முதுகிரி யதனின் முளைத்த பசுங்கொடி
முத்த மளித்தருளே. (10)

முத்தப்பருவ முற்றும்.

6-வது. வருகைப்பருவம்.

அம்பொன்மணி மேகலை யசைந்திடச் செஞ்சிலம்
பார்ப்பநின் சீறடிபெயர்த்
தடியிடுந் தொறுமுன தலர்த்தகச் சுவடெழி
லரம்பையர்கள் புவிமாதர்தம்
வம்பலர்க ணேக்கிட வலம்புரியு மெந்தைமுடி
வளரிளம் பிறையுநாறும்
வண்ணூ புரத்திநெலி கற்றிடற் கோவசையு
மடநடை பயின்றிடற்கோ
செம்பொனடி கைப்பற்று தெய்வப் பிணுக்களொடு
சிறையோதி மம்பின்செலச்
சிற்றிடை யொசிந்துதள் ளாடவிழி யருண்மடை
திறந்தொழுக வெனதிதையமு
மம்மொன்மணி மன்றுந்த னுலய மெனக்களித்
தமரிளம் பிடிவருகவே
யண்டமுழு துங்கரு வுயிர்த்தவிருத் தாம்பிகையெ
னழகுபூங் கொடிவருகவே. (1)

பொன்னெடு விலங்கலை வலஞ்சூழு மிருகதிர்கள்
பொழியுமனல் விடவரவின்வாய்
போராட்டி னுக்கஞ்சி நறையொழுகு செஞ்சலச
பூவிடை யொளித்தன்மானத்
தன்னிகரில் பரமன்விழி முச்சுட ரிலங்கியைத்
தன்வல மலர்க்கைவைத்துத்
தண்மதி தனைச்சடையின் வைத்ததெனை வையாமை
தானுணர்ந் தனதுசெவியின்
மின்பருதி சுடர்விடு குழைத்தோ டிலங்கவளை
மிளிர்கைகங் கணமரர்த்திட
மென்குழன் முடித்தபூ நறையுண்டு களிவண்டு
மிடறுடைந் திசைபாடிட
வன்னநடை தளர்வெய்த வாயமுட னுடல்புரி
யழகிளம் பிடிவருகவே
யண்டமுழு துங்கரு வுயிர்த்தவிருத் தாம்பிகையெ
னழகுபூங் கொடிவருகவே. (2)

மண்டிரத பாலாழி வயிறுளைந் தீன்றபொன்
வனிதையும் மதுரமொழுகும்
வண்டமிழ்த் துறைபடியு மடநடைப் பிடியுநிறை
மதுவுண்ட களிவண்டருப்
பண்டழைக் குங்கமல மனைகுடி தகத்தொண்டு
பண்ணும் பெருந்தொண்டர்தம்
பருமான தத்தடப் பூங்கோயில் குடிகொண்ட
பச்சைமர கதவல்லிவெண்
புண்டரப் பொடிவிரவு செம்புய மலைக்கணழல்
பொங்குவெங் காரிபில்கும்
புழையெயிற் றரவணி புராந்தகக் கொழுநரொடு
போந்தடியர் மிடிதீர்த்திடு
மண்டர்முனி வரரிருடி யாதியர் துதித்துபணி
யாற்றிளம் பிடிவருகவே
யண்டமுழு துங்கரு வுயிர்த்தவிருத் தாம்பிகையெ
னழகுபூங் கொடி வருகவே. (3)

காரிரு டுலக்குமிள ஞாயிறென வொளிவிடுங்
கதிர்மணிச் சபையிலெம்மான்
கட்கடை பிறந்தகரு ணைப்புணரி நீத்தமெழு
கடன்மடை திறந்ததேய்ப்பச்
சீறிடவ ராதமரு கங்கர முழக்கிடத்
திக்கின்மழு வெரிதாவிடச்
செங்கைமா னலரிடச் சிரமாலை கலகலெனத்
திண்டோ ணிமிர்ந்தசைத்துத்
தேறிடு புலிக்குட்டி கண்புனற் றுளிப்பவிதி
செங்கைதா ளங்கள்கொட்டத்
திருமகண் மணாளகை மத்தள முழக்கிடத்
தித்திமிதி தெய்த்தெய்யெனவே
யாரியர் சபாசென்று தோடட்ட வாடல்கண்
டமரிளம் பிடிவருகவே
யண்டமுழு துங்கரு வுயிர்த்தவிருத் தாம்பிகையெ
னழகுபூங் கொடிவருகவே. (4)

மேடமொன் றேடொன்று பொருதுமொலி யானைபோர்
மேவொலியு மிளைஞர்கடவும்
வேகவாம் பரியினொலி வெம்பருதி தேர்பூட்டி
விடுபரிக ணணவிர்க்கும்
மாடமார் வீதியி லுருட்டுதே ரொலியுமண
மங்கல வியத்தினொலியு
மலியலைக் கடலொலியு மஞ்சிடி முழக்கொலியு
மாறத் தெழிக்கும்வடிவா
ணுடரிய மதனைநிக ராடவரொ டூடியிள
நங்கையர்க ளணிகலனொலா
நன்மலர் கரங்கொண் டிழுத்துமறு கெறியுமொலி
நண்ணுதிரு மறுகோதைவே
ருடக மணிப்பணியி னழகுசெய்வ ளத்தநக
ரமரிளம் பிடிவருகவே
யண்டமுழு துங்கரு வுயிர்த்தவிருத் தாம்பிகையெ
னழகுபூங் கொடிவருகவே. (5)

வே று.

சோலை யொலிக்குங் குருகினங்கள்
சுரும்ப ரொலிக்குங் கமலமனைச்
சுருங்கு முகவெண் சங்கொலிக்குஞ்
சொரிதேன் குமுத மீயொலிக்குங்
காலை யொலிக்குங் குக்கிடங்கள்
கதிர்போய் விழுமேற் கடனிலவுக்
கற்றை விரிக்கு மதியைமுகக்
கமலம் வாட்டும் மாதர் நடச்
சாலை யொலிக்கு மிசைகேட்டுச்
சலசத் திருவாய்ச் சிரிப்பொலிக்குஞ்
சற்று மறிவில் லாவெளியேன்
சாற்று மிந்தத் தமிழ்ச்சொன்மலர்
மாலை யொலிக்கும் புயமடமா
மயிலே வருகவருகவே
மஞ்சார் பொழில்சூழ் விருத்தகிரி
வாழ்வே வருகவருகவே. (6)

திருவீற் றிருக்கு மகன்மார்பச்
செம்மற் புயலு முலகனைத்துஞ்
செய்யுங் கமல வட்டவணைத்
திசைமா முகனுந் தொழுதேத்து
மருவீற் றிடுமான் மதமளைந்து
வளரு முலைமா மலைசுமந்த
மகளி ராசைக் கடல்வீழ்ந்து
மாயா வுடலச் சுகம்வேட்டுக்
கருவீற் றிருக்குங் கடிதடச்சிக்
கடல்வீழ்ந் துழலுங் கடையேனைக்
கைதந் தெடுத்து முத்தியெனுங்
கரைசேர்த் தளித்த பரன்முடிக்குக்

குருவீற் றிடுமா முடிதரித்த
கோதாய் வருகவருகவே
கோலத் திருமா முதுகிரிப்பூங்
கொம்பே வருகவருகவே. (7)

தேயா தொளிர்பொன் மங்கலமுந்
திதலை படர்ந்து செம்மாந்துத்
திரண்டு நெருங்கிப் புடைத்துவளர்
திகழ்மென் முலைக்குன் றிரண்டேந்தி
வீயா வளஞ்சேர் விண்ணிலகும்
வியன்பூ வுலகுஞ் சராசரமும்
விளங்கி யசைய வசையாத
விமலன் றானு மசைந்திடவெந்
தீயார் விடமுண் டுகந்தவரன்
செங்கை மலர்தொட் டமுக்கலின்மேற்
சிறியேன் றலைக்கே ரலர்சிலம்பு
சிலம்ப வெடுத்தேற் றழிவில்பொருள்
வாயாற் குதவு மடிபெயர்த்தென்
வாழ்வே வருக வருகவே
வையம் புரக்கும் பழமலைக்கண்
மணியே வருக வருகவே. (8)

வேறு.

ஆழி யலைநே ரெங்கள்பவ
மகற்ற வருக மலைச்சிறைவிட்
டகற்றிப் புவித்தா யுதாமினி
யடையா தெழிற்றாள் தாவருக
தாழ்வி லாப்பே ரருட்செல்வந்
தழைய வருக மெய்ஞ்ஞானந்
தங்கு மௌனந் ததும்பாத
தனிப்பே ரின்பந் தரவருக

ஆழி யினுங்கெட் டுலவாத
வுண்மைத் தவத்த ருளக்கோயி
லொளிரு ஞானச் சுடர்வருக
வொப்பில் விருத்த கிரியமர்ந்து
வாழி வருக மலைக்கரசன்
மதலாய் வருக வருகவே
வையம் புரக்கும் பழமலைக்கண்
மணியே வருக வருகவே. (9

வே று.

நினைய வரிய சுருதி முடியி
னிகழு பிரம சொரூபியே
நிகழு மறிவி லமுத முதவு
நிலவு விரிவெண் மதியமே
பனையின் வளரு மறமென் னரவு
பதற விழுநல் லசனியே
பகரு முயிருண் மருவு மலவல்
லிருளை யடுசெம் பருதியே
யனையி னமல தவர்கள் பசிக
ளகல வருணல் லமுதமே
யடியர் தவநற் பயிர்க டழைய
வருளென் மழைபெய் யெழிலியே
வனைசெய் கமல சரணி விரைவில்
வருக வருக வருகவே
வளரு முதிய கிரியி லமர்பெண்
வருக வருக வருகவே. (10)

வருகைப்பருவ முற்றும்.

7-வது அம்புலிப்பருவம்.

செம்பொன்முடி யமரர்கள் விரும்புபாற் கடலிடை
சனித்தலாற் றிருவெ னுந்தன்
சேடியொடு கூடப் பிறத்தலாற் றற்பெறு
திருத்தாதை மரபு புவிமேற்
பம்பிடக் குலமுதல்வ னுதலாற் றன்சேய்க்குப்
பால்கொடு வளர்த்த பெண்கள்
பரிவொடுந் தழுகொழுந னுதலாற் றற்கொழுநர்
பவளவார் சடைமு டியின்மேற்
கம்பமற வொளிவீசு கண்ணியென் ருேவுயிர்
கலாநிதி யெனத்தெ ரிந்தோ
கைமே லெடுத்துன்னை வாவெனக் கூவிடக்
கடிதவமு னென்செய் தனையோ
வம்புவியி னின்போல்வ ரெவராக லால்விரைவி
லம்புலீ யாட வாவே
யரியமுது கிரியிலமர் பெரியநா யகியினுட
னம்புலீ யாட வாவே. (1)

விண்ணவர் குழாம்பிழிந் தூற்றிக் குடித்துவெளி
வீசுகோ தென்று நவகோள்
விரவும்விட வரவமுள் விழுங்கிக் குச்சிட்ட
மென்றும்வீ ரக்க டவுள்காற்
கண்ணகப் பட்டுதேய்ப் புண்டனை குருத்தார
கமனஞ்செ யிழிவு மேற்ருய்
கயரோகி யாய்க்குறை வடைந்தனையிவ் விழிவெலாங்
கருதாளி தென்ன வருளோ
தண்ணறு மலர்வாய் திறந்துவா வாவெனத்
தன்கைவீ சிக்கூ வினுள்
தவமென்கொ லோநீ பிழைக்குநாள் கிட்டினது
தாமத முருது விரைவி

லண்ணல்கண் டகமகிழ்செய் பண்ணவி மடப்பிடியொ
டம்புலீ யாட வாவே
யரியமுது கிரியிலமர் பெரியநா யகியினுட
னம்புலீ யாட வாவே. (2)

போரேறு விண்டலம் போய்ப்புகுதி யேற்பகைப்
பொங்குமா சுணம் விழுங்கும்
பொருமலை கடற்புகிற் குறுமுனிவ ருபமுனிவர்
புன்கண்வாய்ப் பட்டு மெலிவாய்
சீரேறு மெம்பிரான் செஞ்சடா டவியடையில்
செல்வியிவள் சீர டிகளாற்
செங்குடர் குழம்பவுதை பட்டயர்வை புவியுறிற்
செறிவளை தளிர்க்கை நல்லார்
தாரேறு மார்பினும் வாயினு மறைந்துகொடு
தாழ்ந்தவசை சொல்வ ரதனாற்
றகைமைபெறு சிவராச தானியிவள் பாலடையிற்
ருழ்வொன்றும் வாராது கா
ணூரேறு குடிலப் பிரான்மகிழ் பிராட்டியுட
னம்புலீ யாட வாவே
யரியமுது கிரியிலமர் பெரியநா யகியினுட
னம்புலீ யாட வாவே. (3

கும்பஞ் சுமந்தமுக் கடமொழுகு களியானை
கொன்றதள் போர்த்த வெம்மான்
குடிலகோ டீரம்விட் டிழியாது வாணிதிரு
கோதையர்கள் கைவ ருடவுஞ்
செம்பஞ்சொ டும்பனீர் கூட்டியூட் டச்சங்க
செங்கனியில் கொப்ப ளிக்குஞ்
சீரடிகள் கன்றிச் சிவந்திடச் செய்ததூஉந்
திருவுளத் தடையா துனை
நிம்பஞ் சுமந்தமலர் தொங்கலணி செழியர்குல
நீணிலத் தோங்க வருமோர்
நிமலிவா வென்றுமலர் வாய்திறந் துக்கூவு
நேசமென் ரேச மயமீ

தம்பஞ் சுடைத்தளென வையுறே லாயமுட
னம்புலீ யாட வாவே
யரியமுது கிரியினமர் பெரியநா யகியினுட
னம்புலீ யாட வாவே. (4)

மழைக்கொந் தளக்கோதை யிவளாடு முத்தநதி
மாபுண்ய மடுமூழ் கிநின்
மாருத கயரோ யகன்றுடல் களங்கமு
மாறியெழில் வடிவு பெறலாந்
தழைக்குமுட றேய்ந்துவள ராதுமுழு மதியெனச்
சாபந் தவிர்ந்துய் யலாந்
தண்மலர்ப் பதச் * சோங்கு பற்றியெழு பவசலதி
தாண்டியெழின் முத்தி பெறலா
மிழைக்குங் கொடுந்தீமை வெம்பணிப் பகைநீங்கி
யேக்கமற் றிடவாழலா
மெங்கள்குல தெய்வமிவள் கூவினு ளிதுசமய
மேழையர் தமக்க னுவலிட்
டழைக்குஞ் சடைப்பரம ரகமுறை துரைப்பெணுட
னம்புலீ யாட வாவே
யரியமுது கிரியிலமர் பெரியநா யகியினுட
னம்புலீ யாட வாவே. (5)

சித்தமுரு கிக்கசியு மெங்குமர தேவனிவள்
சேவடிநன் னிழன் மேவினன்
செய்யவிப சித்திருடி மீண்டும் வராவழித்
திகழ்முத்தி பெற்றுய்ந்தன
முத்தமணி நதிமூழ்கி பெற்றனனெர் குருடன்விழி
மூடும்வினை யாளர் நின்போல்
மூவிரண் டறுவர்கொடு வினைநீங்கி நற்கதி
முயங்கினர்க ளித்த லம்போற்

* சோங்கென்பது கப்பலினை.

சுத்தமுறு மூர்த்திதல தீர்த்தமூன் ருெத்ததுநீ
சூழுலகி லியாது னக்குச்
சூழ்வினைக ளற்றுசுக முறுகால முற்றியது
தொல்கிரியென் னிதய முந்த
னத்தர்மகி ழாலய மெனக்கொண்ட வம்பிகையோ
டம்புலீ யாட வாவே
யரியமுது கிரியிலமர் பெரியநா யகியினுட
னம்புலீ யாட வாவே. (6)

விண்ணகத் துறுபல்லு டுத்திரள்கள் புவியினிடை
மிளிர்முத் தெனக்கொட்டவும்
விரிபுவித் தலைவரொடு மமரருல கத்தர்வாள்
வெட்டுணவர் பொற்ருெ டியினுர்
தண்ணருத் தும்பைமிலை சேனையொடு மச்சேனை
தலைவர்படை பட்டொழிந்தே
தகர்பசுங் குடர்மூளை மச்சைநிண மொடுபச்சை
தடிநாச் சுவைத்து ருசிகாண்
வண்ணவட் டங்கொள்சே னப்பந்தர் நிழலலகை
மலிகுரவை கூத்தாடிட
வாளமர் புரிந்தெட்டு திக்குவிசை யங்கொண்டு
வண்கைலை யுங்கைக் கொள்வா
னண்ணன்மே லமரேற்ற விவள்வெகுளி கொளுமுனே
யம்புலீ யாட வாவே
யரியமுது கிரியினமர் பெரியநா யகியினுட
னம்புலீ யாட வாவே. (7)

விரிவுறும் பலகோடி யண்டமிவள் செங்கைமலர்
விளையாடு பொற் கழங்காம்
வெற்றியுள வறுகோடி சத்தியர்க ளேவல்புரி
வீறாழி யக்கா ரராம்
பரிவிநெடு மட்டலக் குமிகள்பா கடைகள்கைப்
பற்றவிடு தாதி யர்களாம்
பகரரிய மெய்ஞ்ஞான வானந்த வமுதமிவள்
பசிதணி நறும்போசனந்

திரிவிலரு மறையின்முடி யிவளரசு செய்திடுந்
திகழ்மணிச் சிங்கா சனந்
தேக்குமரு ணவகோடி சித்தர்களு மிவள்முன்செல்
சேனு பதித்த லைவரா
மரியதொரு சிவராச தானியிவள் முனியுமுன
மம்புலீ யாட வாவே
யண்டர்புகழ் முதுகிரிப் பெரியனு யகியினுட
னம்புலீ யாட வாவே. (8)

வேறு.

சிறுவிதி தந்தைச் சிவனையி கழ்ந்துடல்
சிந்தித் தகரானுன்
றிகழளை திருடித் தமயள் மத்தடி
சேர்ந்துரல் கட்டுண்டான்
பெறுமொரு மைந்தன் சந்திதொ றும்பெண்
பித்தொடு தனியுற்றுன்
பின்னொரு தனையன் குறமக டிருடிப்
பெருமலை குடிபோனுன்
மறுவறு கொழுநன் கிழமலை யென்றுள
மதியேல் மதிமன்னீ
மலிமூ வுலகுச ராசர மிவளுள
மருவைந் தொழிலறிவாய்
வறுமை தவிர்த்திடு மிவளுட னுடிட
வாவம் புலிவாவே
வளர்முது கிரியுறை மயிலுட னுடிட
வாவம் புலிவாவே. (9)

ஐந்தரு நிழல்சுரர் தொழவம ரிந்திர
னுள்பட் டந்தரவோ
வகில மளித்திடு பிரம பதத்துட
னவர்தொழில் தந்திடவோ

செந்திரு மகண்மகிழ் விண்டு செயுந்தொழில்
செறிபத மருளிடவோ
செறிகயி லைக்கிரி நாயக னுக்கித்
திகழைந் தொழில்தரவோ
பந்தமில் முத்திப் பதமரு ளிடவோ
பக்குவர் பலர்நிற்கப்
பரிவொடு நினைவா வாவென் றனளிப்
பண்ணவி யருளன்றோ
வந்தெனை வலிதாண் மயிலுட னுடிட
வாவம் புலிவாவே
வளர்முது கிரியுறை மயிலுட னுடிட
வாவம் புலிவாவே. (10)

அம்புலிப்பருவ முற்றும்.

8-வது அம்மானைப்பருவம்,

பொங்கொளி மணிச்சுடிகை வாளர வணைத்துயில்செய்
புயன்மார் பணிந்த மணியும்
புதுமலர்ச் சோலையைந் தருநீழ லரசனமர்
பொன்னுலகின் வதிம ணியையு
மைங்கனல் நடுத்தவஞ் செய்யமர ரிருடிமுனி
யவுணர்முதன் மனுட ரெவரு
மகவிச்சை யுண்டெனிற் கொண்மினென வாங்காங்
கணங்கைகொடு விட்டெ றிதல்போற்
றுங்கசெம் மணிகுயிற் றியகழங் கேகத்
தொடர்ந்துநின் விழிவண் டுபோந்
தோற்றமென கருமணி குயிற்றம் மனைப்பின்
றொடர்ந்துசெல விருகை மலரேற்
றங்கமல சேடியொடு சபதமிட் டம்மைநீ
யம்மானை யாடி யருளே
யத்தர்முது குன்றரிடம் வைத்திடு பசுங்கொடிபொன்
னம்மானை யாடி யருளே. (1)

கும்பஞ் சுமந்தபுனல் கொட்டல்போ லக்கடாங்
கொட்டுங்க டாக்கரி யின்வாய்க்
கோதிலாச் சோற்றிரட் கவளந் திரட்டிக்
கொடுத்தலென வுங்க லைமதிப்
பம்பமு தினுக்கிரையு மமரர்க்கு வெவ்வேறு
படவமுத கலசமி டல்போற்
பதுமக் கரந்துஞ்சி வெள்ளோதி மத்திரள்கள்
படர்விண் பரந்து செலல்போற்
செம்பொன்மணி முத்திட் டிழைத்தபந் ததுவிண்
செறிந்துநிரை நிரையிற் செலச்
செறியொளி மணிப்பீட முற்றெறித னேக்கியெஞ்
சிவபிரா னதிச யிப்ப
வம்பொன்மணி வளையார்ப்ப வலர்கரங் கொண்டம்மை
யம்மானை யாடி யருளே
யத்தர்முது குன்றரிடம் வைத்திடு பசுங்கொடிபொன்
னம்மானை யாடி யருளே. (2)

கொழுந்தா மரைக்குடிகொ ளன்னமும் பேட்டினெடு
கொழுநரு வுண்டே கிடுங்
குதுகுல வனத்தைவண் டைக்கண் டழுக்காறு
கொண்டுமற் றோர்க மலம்வாழ்
வுழுங்கார்ச் சுரும்பினம் பின்றொடர்வ போலநின்
ணெண்கமல கரமுற் றெழு
மொண்கரு மணிப்பந்து மொளிசெய்முத் துப்பந்து
மொன்றின்பி னென்றே குதற்
செழுங்காத் தருக்கண்மொய்த் திடுவண்டும் விண்ணதிச்
செறியன்ன முங்கண் டுவெஞ்
சினமுற் றெழுந்துநள் ளாறென நினைந்துபோர்
செயவெட்கி மீண்ட டையுமா
லழுந்தார் மணிக்கங் கணக்காங் கொண்டம்மை
யம்மானை யாடி யருளே
யத்தர்முது குன்றரிடம் வைத்திடு பசுங்கொடிபொன்
னம்மானை யாடி யருளே. (3)

கண்ணுக்குண் மணியனைய சேடியரில் சிலரெதிர்க்
கைப்பந் தெடுக்தா டநின்
கதிர்செயம் மனைபிடித் தெதிர்வீச விடசாரி
கதுவிவல சாரி திரியா
வெண்ணுக் ககப்படா வம்மனையொ ராயிர
மெடுத்தெடுத் தெறிய விண்மீ
தேறிநிரை நிரையா யிருத்தனீ பெருமண்ட
வெழினிலா யடுக்கொவ் வுமாற்
பண்ணுக் கடங்காத விசைகுறு முனிக்கையாழ்
பாடநெக் குருகு பொதியைப்
பருமலை யுதித்துதென் றற்குழவி விளையாடு
பைம்பொழிலி லம்பைந் துகோத்
தண்ணிரத விக்குவிற் குதைபூட்டி யொலிசெய்கர
மம்மானை யாடி யருளே
யத்தர்முது குன்றரிடம் வைத்திடு பசுங்கொடிபொன்
னம்மானை யாடி யருளே. (4)

தும்பேறு வெள்விடை யுகைத்தேறு மெம்பிரான்
ருேற்றமுத லைந்தொ ழில்செயத்
தூயசெவ் வருணின்று தோற்றிமுக் குணமுயிர்த்
துரிசில்பர மூலகாக் கியே
சம்பேறு பரியா தொடுக்குநா ளவ்வருட்
சார்ந்தொடுங் கிடுமுறை மைபோற்
சவிவிடுசெம் மணிதரள மணிகரு மணிக்கோத்து
தட்டுமம் மனைகள் விண்போய்
வம்பேறு நின்கைமலர் மாறிமா றிச்சென்று
வந்தடைய நின்கொ ழுநனுர்
வளர்பிறைச் சடைமுடிச் சிரமசைத் தங்கைவிரல்
வளர்நாசி மீ தேறிட
வம்போ ருகஞ்சினவி வெம்போ ரிடுங்கைமல
ரம்மானை யாடி யருளே
யத்தர்முது குன்றரிடம் வைத்திடு பசுங்கொடிபொன்
னம்மானை யாடி யருளே. (5)

வேறு.

கோங்கு முகையி னெழில்கவற்றுங்
கொம்மை முலையார் கொழுநரொடுங்
கூடி யணையி லூடலினற்
குளிர்வெண் டரளக் கோதையொடும்
வாங்கு படச்செங் கண்ணரவின்
மணிமா லையையு மனம்வெறுத்து
வண்கை மலராற் பறித்தெறியம்
மணியைச் சிறிய குருகுதருத்
தூங்கக் குயிற்றுங் குடம்பையினுட்
சுடரிட் டிரவி லடைகிடப்பத்
துன்னம் மணிகள் விடுமொளியாற்
றூவா விகடா மரைக்குமுத
மாங்கு மலரும் வளநடுநாட்
டரசா டுகபொன் னம்மனையே
யமல முதுகுன் றிடைவளர்பெண்
ணமுதா டுகபொன் னம்மனையே. (6)

புறமுள் ளகப்பொற் சுளைக்கனிகள்
பொழிதேன் வாரி யலையெறிந்து
புக்குப் படப்பை நிறைந்துலவப்
போத விளைசெஞ் சாலியொடுந்
திறநற் கதலி மிடற்றெடிக்குஞ்
செங்காய்க் குலையுங் குலைத்தெங்குந்
தீஞ்சா றுறுஞ்செங் கரும்பினெடுஞ்
செழிய கமுகும் விண்ணளவி
மறநற் குலிசப் படையரசன்
மன்னுங் கொழுமண் டபம்பொலியு
மணித்தூண் டோறு நாடிமன
மகிழ வதனை யலங்கரிக்கு

மறமார் வளஞ்சே ரெழினடுநாட்
டரசா டுகபொன் னம்மனையே
யமல முதுகுன் றிடைவளர்பெண்
ணமுதா டுகபொன் னம்மனையே. (7)

களபக் குழம்பாற் றுய்யில்வனை
கதிர்மென் முலையார் குழற்பொதியுங்
கந்த மலர்த்தேன் காமலர்த்தேன்
கவர்வாய் குடித்துக் குமட்டளிகள்
தளவ முறுவற் றையலர்கள்
தண்ணீ ராடத் தடமுலைமார்
தங்குங் கலவைக் குழம்புமணஞ்
சார்ந்தோட் டெடுத்தா றலையெறிந்து
வளநெற் பழனம் பாய்ந்துமரை
மலர்த்தா துகுத்து முப்புடைக்காய்
வாரி யெடுத்துச் சென்றுகடல்
வயிறு தூர்த்தங் கதனுழத்
தளவைக் குறைக்குஞ் செழிநடுநாட்
டரசா டுகபொன் னம்மனையே
யமல முதுகுன் றிடைவளர்பெண்
ணமுதா டுகபொன் னம்மனையே. (8)

வேறு.

செம்மலர் நின்கை யெறிமுத் தம்மனை
சேல்விழி யொளிதோயத்
திகழ்மற் றொருகைக் கருமணி யம்மனை
திருநகை யொளிகதுவக்
கொம்மைமென் முலையார் சிலர்வெண் முத்து
குயிற்றிய தென்பர்சிலர்
கொழுவிய நீல மிழைத்தன வென்றுங்
குளறுவர் நிலையறியார்

தம்மன மொப்ப வுரைப்பர்க ளன்னிய
சமயர்கள் மெய்ப்பொருளைச்
சதுமறை தந்திர சைவந் துணிபொருள்
சாரக் கரமெவையு
மம்முதல் கொளல்போ லுறைசிவன் மகிழ்பெண்
ணுடுக வம்மனையே
யணிமுது கிரிகல் யாண சவுந்தரி
யாடுக வம்மனையே. (9)

பண்ணக லாவளி குமுர்குழ லாயெறி
பருமுத் தம்மனைவிண்
படருதல் சிற்கக னந்திரு மேனி
படைத்திடு மெம்பெருமான்
றண்ணொளி விடுமுத் தார மெடுத்தவர்
தடமார் பிடல்போலாந்
தகுபல விதமணி யம்மனை விண்ணிற்
றுவி யெடுத்தெறிதல்
கண்ணிய வுள்ளக் காதலை யோதிக்
கரும முடித்து வரக்
கைவள ரன்னங் கிளிகுயில் தூதுக்
காவிடல் மானுமல
ரண்ணிய கலைவா ணித்திரு சகியோ
டாடுக வம்மனையே
யணிமுது கிரிகல் யாண சவுந்தரி
யாடுக வம்மனையே. (10)

அம்மானைப்பருவ முற்றும்.

9-வது நீராடற்பருவம்.

செந்தார் பசுங்கிளி மொழிக்கோதை நின்னெழிற்
றிருமேனி விரியொளியினுற்
சேயொளிய பவளக் கொடிப்பசுங் கொடியாத்
தெண்ணிலவு விரிமுத்தமு

நந்தார் மரைச்செமல ரூங்குமுத முஞ்சங்கு
மணியொளிய மரகதமதாய்
நாகிளவெ ளன்னங் கலாமஞ்ஞை யாமெங்கு
நாடியலை யச்சேவல்கள்
கொந்தார் குழற்பெண்கள் குடமுலை யணிந்தகத்
தூரிகற் பூரகளபங்
குழையக் கரைத்தோடி காளிந்தி வாணிவிசை
கொண்டகங் காநதியதாம்
வெந்தாரு முத்திபெறு முதுகிரிப் பெண்ணரசி
வெள்ளநீ ராடி யருளே
வித்தகர்க ணத்துமணி முத்தநதி யுற்றபுது
வெள்ளநீ ராடி யருளே. (1)

கைமல ரணிந்தவளை நிரைகலீ ரென்றலறக்
கரியவிழி செவ்வி ழியதாய்க்
காட்டிடச் செம்பவள விதழ்வெண் ணிறங்கொளக்
கற்றைக் குழற்ச ரியவே
மெய்ம்மறைக ளுன்குடு நாட்டேடி யுங்கண்டு
மேவொணுப் பரம னுருவின்
மேன்முத்து முத்தா யெழுந்தவா னந்தகுறு
வெயர்வையுயிர் மேற்க ருணையாற்
பொய்மலியு முலகினுறு சரவசர வுயிரெலாம்
போந்தாடி நற்க திபெறப்
புவியிடைக் கைமல ரெடுத்திடப் புண்ணியம்
பொலியுமணி முத்த நதியாய்
வெய்யபவ நோய்நீக்கு முதுகிரிப் பெண்ணரசி
வெள்ளநீ ராடி யருளே
வித்தகர்க ணத்துமணி முத்தநதி யுற்றபுது
வெள்ளநீ ராடி யருளே. (2)

குழையோ விடும்வண்டு மலரோ விடத்திரை
கொழித்தோ விடுஞ் சங்கினங்
கொங்கைக ளசைந்தாட மாற்றேறு பூனதங்
கொண்டெழில் பெறச் செய்திடு

மிழைபாட கேசபா சத்திநெடு சைவல
மெழுந்தாட விழியி மைபொரூஉ
மிகுளையர்க ளோடியா டிப்பிடித் தன்னங்க
ளேந்திவிளை யாடி டச்சேல்
. மழையா ரிடந்துள்ளி புயலகடு கீண்டேகி
வான்றரு வொடித்கெட் டிவிண்
மன்னுதெய் வக்கங்கை யாடிமீ ளுந்திவ்ய
மணிநதி யலைக்க ரத்தால்
விழைவா லழைத்தெறியு முதுகிரிப் பெண்ணரசி
வெள்ளநீ ராடி யருளே.
வித்தகர்க ணத்துமணி முத்தநதி யுற்றபுது
வெள்ளநீ ராடி யருளே. (3)

புத்தமுத முண்டுலவு தெய்வமட வாரிரு
புறஞ்சூழ்ந்து வரவெ ழிற்செம்
புண்டரிக வட்டவணை யொலிமாதர் கைநினது
பொன்மேனி மாசு தீர்ப்பச்
சுத்தமுற திருமேனி பொதிகளப குங்கும
சுகந்தசந் தமும ளவளாந்
தோயங் கருங்கடற் செங்கடல தாக்கமதி
தோன்றுசெம் பருதி யேய்ப்பக்
கொத்துமலர் தேமாங் கனிக்கதலி கனியுகுங்
கொழுநறவு வயல் பாய்ந்திடக்
கொழுவிவளர் செஞ்சாலி கதிரிரவி கடவுட்குக்
குளிர்கா லெடுத்து வீசும்
வித்தரும மொத்தசடை முதுகிரிப் பெண்ணரசி
வெள்ளநீ ராடி யருளே
வித்தகர்க ணத்துமணி முத்தநதி யுற்றபுது
வெள்ளநீ ராடி யருளே. (4)

பீடுறுநல் லெந்தாய்நீ யாடுமித் துறையெமான்
பிட்டுக்கு மண்சு மந்துப்
பிரம்படியு முற்றவிட மிதுவெனச் சுட்டிதிரு
பெண்சகிகை காட்ட விரலால்

வாடுறு முகத்தினொடு மனநொந்து கண்கணீர்
மாலைமுத் தாக் கொட்டியே
வாவென்று கொழுநரொடு மைந்தரொடு மித்தல
மடைந்ததென் மாதவ மலோ
கூடுமுயி ரியாவைக்கு மருளால் வலச்செவிக்
கொளவைந் தெழுத்து ரைத்துக்
கோதிலரி யயனமரர் குலவிடும் பொன்னகர்க்
குடியேற்றி வைப்பது மலால்
வீடுமுத வுங்கருணை முதுகிரிப் பெண்ணரசி
வெள்ளநீ ராடி யருளே
வித்தகர்க ணத்துமணி முத்தநதி யுற்றபுது
வெள்ளநீ ராடி யருளே. (5)

வே று.

கொலைவாள் விழியிணை கண்டு வெருண்டுக்
குதிசேல் விண்ணேறக்
கொழுமுத் தாரங் கண்டுக மஞ்சூற்
குடவளை கரையேறத்
தலைமைக் கொழுமணி யிழைகுழை தோடுறு
தாழ்செவி யிணைகண்டே
தழையத் தழைவள் ளைக்கொடி யஞ்சித்
தண்பசு முகம்வாட
வலைபுன லாடிடு கூந்தலி னைக்கண்
டசைசை வலமோட
வுண்ணிய புற்புத முலையெழில் கண்டுதன்
னங்கமு டைந்தோடத்
தொலைவில் பதந்தரு புண்ணிய மடுநற்
றுறைநீ ராடுகவே
தொன்முது கிரிமணி முத்தா நதிபொற்
றுறைநீ ராடுகவே. (6)

நீர்ப்பூங் கொடிமலர் கொய்து தொடுத்திடு
நிறைநறை தொடையினொடு
நேயத் தோடீட் டியசிந் துரமு
நிகழிரு கொங்கையின்மேற்
கோர்ப்பூ விற்கொடி தீட்டிய தொய்யிற்
குடைபுனல் கொள்ளைகொளக்
கொடியிடை புனைநுண் டூசு நனைந்துக்
குவிதன முதலுருவச்
சீர்ப்பொலி யழகெம் மையன் விழிக்குச்
செல்வ விருந்திடுமாற்
சேயிதழ் வெளிறக் கண்கள் சிவப்பச்
செறிசே டியர்கள்குழாந்
தோர்ப்புற வம்பிகை புண்ணிய மடுநற்
றுறைநீ ராடுகவே
தொன்முது கிரிமணி முத்தா நதிபொற்
றுறைநீ ராடுகவே. (7)

அஞ்சிறை யன்னம் பலசூழ் தரநடு
வாடு மயிற்போலு
மவிரு முடுக்கண நடுவிற் பொலிதரு
மழகுவெண் மதிபோலும்
வஞ்சியர் சூழ்தர நடுவண் முளைத்திடு
மரகத கொடிபோலும்
வாங்குங் கொடியிடை வீக்கிய மேகலை
வடிவி னொதுங்கியிட
விஞ்சிய வானவர் தானவ ரிருடிகள்
வியன்மா தவர்புவியோர்
விழைவொடு மரவோ மரவென மூழ்கிடு
மிகுபே ரொலிமேவுந்
துஞ்சலி லம்பிகை புண்ணிய மடுநற்
றுறைநீ ராடுகவே
தொன்முது கிரிமணி முத்தா நதிபொற்
றுறைநீ ராடுகவே. (8)

வேறு.

தொய்யின் முலைப்பொற் குடங்கொண்டு
தூநீர் நீந்தி விளையாடுந்
துணைச்சே டியர்மேற் பசுமஞ்சட்
சுண்ண மெறிய வறச்சேக்குஞ்

செய்ய கரையி னிளைஞருளஞ்
செறியுங் காமக் கனன்மூட்டச்
செறிநீ ரொத்தி யுதர்குழற்குத்
திவ்ய மணஞ்சேர்த் தூட்டுபுகை

துய்ய கதலிக் காடடையத்
தொங்குங் குலைக்காய் பழுத்துமிகச்
சொரிதே னருவி பாய்ந்துவயற்
சோராச் செந்நெல் மிகவிளையும்

பொய்யில் தவர்சூழ் புண்யமடுப்
புதுநீ ராடி யருளுகவே
பொற்பார் விருத்தாம் பிகையனமே
புதுநீ ராடி யருளுகவே. (9)

வள்ளக் கமல மலர்மலர்த்தும்
வானு ரிரவி தனைவிரும்பா
வடிவார் பொன்னாட் டுலவு தெய்வ
மடவார் தொடுத்துச் சூட்டுநறு

வெள்ளம் பெருகம் மாலைபொதி
வியன்றேட் கொழுந ரொடும்பவனி
வீதி வரவிந் நகர்மடவார்
வெண்ணுண் டூசு மிகநனைய

வுள்ளங் கவற்றுந் தனமுதலா
முறுப்பெல் லாமும் வெளியாக
வொண்கைம் மலராற் கண்புதைப்ப
வுந்தி குதிக்குஞ் சேற்சிறகர்ப்

புள்ளு மகிழும் புண்யமடுப்
புதுநீ ராடி யருளுகவே
பொற்பார் விருத்தாம் பிகையனமே
புதுநீ ராடி யருளுகவே. (10)

நீராடற்பருவ முற்றும்.

10-வது பொன்னூசற்பருவம்.

பாயொளி பழுத்தபவ ளக்கா னிறுத்தமிசை
பருவச்ர விட்ட மிட்டுப்
பகரருண கிரணரத் னப்பலகை நடுவிட்டு
பருவவெண் முத்துத் தாம்பாற்
றாயொளி விரிந்திட வசைத்துவிண் டருநிகர்த்
துறுவெள்ளி சினைதூக் கியே
துன்னுமந் தாரமிரு வாட்சிமல் லிகைமுல்லை
தூமலர்த் தொடைக ளூற்றி
நேயமொடு கலைவாணி யிசைபாட திருவிந்த்ரை
நின்றுதைந் தாட விருபால்
நெக்குருகி யன்பா லிசைத்தவிப் புன்கவியி
னீள்செவி யிடுந்த மிழ்துறைப்
போயபூங் கொடியுயிர்க டோறுநின் ருட்டுபவள்
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலைப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே. (1)

ஐம்பான் முடித்தமலர் வண்டாட துடியிடை
யசைந்தாட வவிரு மணிமுத்
தாரமுடன் மாணிக்க மாலைவெயில் விட்டாட
வாதிசுரர் கொண் டாடவே
வம்பாரு நின்மேனி மாகதப் பாசொளி
மலர்ந்தெண் டிசைப்ப ரவலால்
வையமுழு தும்நினது திருமேனி யென்றுமறை
வாழ்த்துதல் வெளிப் பட்டதா
லம்பார் சடைப்பிரான் விழியுங் கருத்துநின்
ருவலொடு மூச லாட
வக்குநெக் கிட்டுருகு மெய்யன்ப ரேழ்பிறவி
யாழ்கட லுருத ருடதும்

பும்பாத நன்கல னளிக்கும்விர்த் தாம்பிகைப்
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலைப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே. (2)

கூராடு வெண்பற் குழைந்துதடின் மேற்செலக்
கொடுவிழி யனற்பொ றியெழக்
குதைவரிச் சிலைநா ணெறிந்துகணை கோத்துவாள்
கொண்டமர் குறித்து வெஞ்சூர்
தாராடு புயவசுரர் கூட்டமொடு போந்தமரர்
தத்தளித் தோட வெம்போர்
தாக்கவரு டற்குடர் பிளந்துசிர கரமறத்
தடியவெழு சோரி யாழிக்
காரார் பிணத்தொடறு சிரமிதப் பாய்க்கொண்டு
கரைசேர் கவந்த மாடக்
கட்டியழு மனைவியர்க டிண்டாட வங்கைமலர்
கதிர்வேல் திரித்து வெய்ய
போராடு குழவியைத் தொட்டிலிட் டாட்டுபவள்
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலைப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே. (3)

தேங்கொளிய பொற்றே ரொடும்போர்க் கடுத்திடு
திருக்கோல முங்கண் டுவெஞ்
சினக்கோப வனலவியக் காமா னிலஞ்சீறு
சிகையென வெழுந்து படர்செம்
வாங்கொளிய குடிலகோ டீரப் பிரான்மனதும்
வளைமேரு வில்லு முருக
வளரொளி யிளம்பிறை முடிந்ததுந் தலைமாலை
வாகுற்ற துந்தோன் றிடத்
தூங்கொளி கருங்களத் தொடுபோர்க் களத்தமர்
தொடங்கினவ ருளம லமறத்
துணைபுருவ விற்கருங் கட்கணை தொடுத்தொருகை
தொடர்விற் குனித்து வெம்போர்ப்

பூங்கோல மேதிரு மணக்கோல மாயினவள்
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலைப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே. (4)

திரையாடு பாற்கடற் றேன்றமுத முங்கைப்பச்
செங்கையமர் பைங்கி ளிசொலுஞ்
சீயென வெறுப்பவுரை யாடிடும் பூங்கொம்பு
செம்மலரின் மாலை நாற்றி
விரையாட நடுவரவின் மணிகுயிற் றியபலகை
வீற்றிருந் தாடு தோற்றம்
விரிகுணக் குன்றிலிள வெயில்விரிக் கும்பருதி
வியன்மண் டலத்தை யேய்ப்பக்
கரையாடு மலைமுத்த நதிநீந்தி குமரன்வாய்க்
கையாடு பாலூட் டிமேற்
கதிகாட்டி முடியின்மல ரடிசூட்டி மதியூட்டு
கருணை கரிக்க டையனேன்
புரையாடு மிதையமல ரிடையாடு மெழின்மயிற்
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலைப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே. (5)

பகர்மகர யாழினே ழிசைநா மகட்பாடப்
பாயொளிபொன் னூச லாடப்
பையரவ மாலைபுய நெக்கிக் குலுங்கவெழில்
பார்த்துள மகிழ்ந்து நகையா
வகிர்சடைச் சிரமசைத் திடநடுப் பொதிகங்கை
மங்கைதுள் ளிக்கீழ் விழ
வாவென் றழைத்துபகை மாறிகட் டித்தழுவி
வாய்முத்த மிட்ட ளவளாய்த்
துகிர்சடைப் பரன்முடியில் வைத்தாசி சொல்லியவர்
துன்றுசந் தேக மொருவுந்
தோகைகரு ணைகரிகல் யாணசுந் தரியெத்
தொழிற்குமுன் னின்று தவிசெய்

புகர்முகக் கயமுனியைத் தொட்டிலிட் டாட்டுபவள்
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலைப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே.

தெண்ணிலவு விரிரத்ந பலகைமீ துற்றம்மை
திருவூச லாட்ட வாடுஞ்
செவ்வியையு மதியமுத கிரணமுண் டுலவுவிண்
செரிசகோ ரப்பு ளாயும்
பண்ணிலவு மறுகாற் சுரும்பாயு மங்கைவளர்
பைஞ்சிறைக் கிள்ளை யாயும்
பரசிவன் றிருவுருப் பலவெடுத் துன்மகிமை
பார்த்துளங் களி தூங்கிட
விண்ணுலாம் மேற்றலத் தங்கலார் குடைபுனலின்
விரைகுங் குமச்சே றுதோய்
வீறுவெள் ளானைசெவ் வானையா முருநோக்கி
வெண்பிடி வெருண் டோடுமாற்
புண்ணியம் பொலிமாட மலியுமுது கிரியாசி
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலைப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே.

செழுமுலைச் சுமைபொறு திறமிடை யெனக்குழற்
செறியும்வண் டார்த்தெழுப்பொற்
செவ்வூசல் காலுதைந் தாடும்ம யத்துநாச்
செல்விதன் செங்கை யலரான்
விழுமலர்ப் பதத்துளடி பற்றியிது வெண்பிறை
வியன்சுவட தாமி துவுமோர்
வெண்வலம் புரிசீற்ற தாமெனக் கண்டம்மை
விதிவலிய தென்று மகிழா

வழுவில்வலி யோர்செல்வர் யார்க்குமொரு நாளினும்
வணங்கா முடித்த லேவியோர்
வண்கயிலே வரையுற்றுச் செங்கைவிற் குனிஞான்று
வளமுடி வணங்க லென்றே
புழுகணித் திருவழகி முதுகிரிப் பெண்ணரசி
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலேப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே. (8)

நீதிவழு வாதுநற் சிவராஜ தானியாய்
நிகிலவகி லாண்ட மெல்லாம்
நெஞ்சுபறை கொட்டிடச் செங்கோல் செலுத்திகொடி
நிறுவியா ருயிர்செய் கன்மம்
பேதியா வகைபடைத் திடலளித் தற்போக்கல்
பின்மறைத் திடல்வி ளக்கல்
பிரமன்முத லேவர்க்கு மைந்தொழி னடத்திவரப்
பேருட் கட்க டையினு
வீதிவற் கீதென வெடுத்தனுவ விட்டுபின்
பிவர்கட்கு மைந்தொ ழில்செயு
மேகநா யகிநித்ய கல்யாண சுந்தரியிவ்
வேழைசொல் தமிழ்க்கி ரங்கிப்
பூதியனு பவவடி நிழற்குடி யிருத்துபவள்
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலேப்பரம ரழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடி யருளே. (9)

பண்ணிசைக் கும்பிழை யளிக்குமணி வண்டுமுரல்
பன்மலர் முடித்த குழலும்
பனிமதித் திருமுகமு மருள்விழியு மிருசெவிப்
பதிமணித் தோடு குழையுங்

தெண்ணிலவு முத்தமூக் குத்தியுந் திருநுதற்
செறிபட்ட முந்தி லதமுஞ்
செய்யநாற் புயமுமல ரபையவர தமுமக்கை
திகழ்பைஞ் சிறைக் கிள்ளையும்
வண்ணமலர் மாலைபுனை மார்புந் திருத்தனமும்
வஞ்சியிடை யொட்டி யாணமும்
வனைமே கலைப்பட்டு வீக்குடைய நூபுரம்
வனைந்திடு மலர்ப் பாதமும்
புண்ணியத் திருவழகி புனைதமிழ்க் கருளரசி
பொன்னூச லாடி யருளே
புகழ்பழ மலைப்பரம ரழகினுக் கொத்தமயில்
பொன்னூச லாடி யருளே. (10)

பொன்னூசற்பருவம் முற்றும்.

ஆகபருவம் பத்துக்குத் திருவிருத்தம் - ௱.

1920